Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-s/askr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 30 (29.08.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 329

# பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளை ஒடுக்க புலிகளின் உதவியை இந்தியா நாடவேண்டும்!



## தடையை விலக்கவும் கோருகிறார் பால் தாக்ரே

(புதுடெல்கி)

**பாகிஸ்தான் ஆதரவுத்தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு, விடுதலைப் புலிகளின் ஆதரவை இந்திய அரசாங்கம் பெறவேண்டும் என்றும் - இதற்காக விடுதலைப் புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை, இந்திய மத்திய அரசு உடன் விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும் - சிவசேனைத் தலை வர் பால் தாக்ரே தெரிவித்துள்ளார்.**

மும்பாயில் கடந்த திங்களன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக பந்த்ராவில் உள்ள தமது வீட்டில் வைத்துச் செய்தியாளர்களிடம் பேசிய போதே, பால் தாக்ரே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ சதி வேலைகளை முறியடிப்பது அவசியமாகும். இதற்கு விடுதலைப் புலிகளின் உதவியைப் பெறலாம்.

அண்மையில் துணைப்பிரதமர் அத்வானியைச் சந்தித்தபோது, விடுதலைப் புலிகளின் உதவியை இந்தியா நாடவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன், என்றார்.

தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடும் அளவுக்கு விடுதலைப் புலிகளிடம் போதுமான பயிற்சியும் மனித ஆற்றல்களும் உள்ளன என்று பால் தாக்ரே மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டு - சத்துருக்கொண்டானில் அதிரடிப்படை திடீர்ச்சோதனை!

மட்டக்களப்பு - சத்துருக்கொண்டானில் விசேட அதிரடிப்படையினர் நேற்று போக்குவரத்தில் ஈடுபட்ட பயணிகளை சோதனையிட்டனர்.

மட்டக்களப்பிலிருந்து செல்பவர்களையும் சத்துருக்கொண்டானூடாக மட்டக்களப்புக்கு வருபவர்களையும் இவர்கள் சத்துருக்கொண்டான் சந்தியில் வைத்து சோதனையிட்டனர்.

வாகனங்களில் வருகின்ற பயணிகளை இறக்கிச் சோதனையிட்ட பின்னரே தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கின்றனர். இதனால், மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பில் படையினர் தமது சோதனை நடவடிக்கைகளை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஜே.வி.பியின் நான்கு நாள் பேரணி கொழும்பில் நேற்றிரவு முடிவுற்றது!

### ஜனாதிபதியின் சார்பில் அனுரா பங்கேற்பு

(கொழும்பு)

நான்கு நாட்களாக இடம்பெற்ற ஜே.வி.பியினரின் 116 கிலோமீற்றர் பாதயாத்திரை நேற்று மாலை 7 மணியளவில் லிப்டன் சதுக்கத்தில் நிறைவுபெற்றது.

காலியில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த இந்தப் பாதயாத்திரை வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கக்கோரியும், இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவதை எதிர்த்தும் ஜே.வி.பியினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

நான்காவது நாளான நேற்றுக் காலை பாணந்துறையில் இருந்து ஆரம்பித்த பேரணியில் ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. ஆதரவாளர்கள் பங்

(10 ஆம் பக்கம் பார்க்க).



ஜே.வி.பியின் நேற்றைய பேரணியிலிருந்து....

## வட - கிழக்கை பிரிக்கும் நடவடிக்கை இலங்கையை பேரழிவுக்குள் தள்ளிவிடும்

### கூட்டமைப்பு அறிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிரிக்க ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை முழு இலங்கைக்கும் பேரழிவை ஏற்படுத்தும். இந்த ஆபத்தான நடவடிக்கையை எடுப்பதை ஜனாதிபதி நிறுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைபபு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களைக் கொண்ட தமிழ்மொழிப் பிராந்தியம்தான் பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் தீர்வுக்கு ஒரு அத்திவாரமாக அமைகின்றது. இதனை நாசமாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் தமிழ்மக்களுடைய பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியற்தீர்வு காணும் முயற்சி பயனற்றுப் போய்விடும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிகாரப்பகிர்வு அலகு மூலம் பிராந்தியம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசியல் வாக்குறுதிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.


வடக்கு - கிழக்கைப் பிரிப்பது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு தலைவர் மட்டக்களப்புக்கு விஜயம்!

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் - நேற்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு பல்வேறு தரப்பினரோடும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

நேற்று முற்பகல் இராணுவத்தின் 23 ஆவது படைத்தளத்துக்குச் சென்று படைத்தரப்பு அதிகாரிகளை இவர் சந்தித்தார். 23 ஆவது டிவிசனின் ஆவது படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் ரஞ்சித் பாலசூரியாவையும், கேணல் ராஜித சில்வா மற்றும் காவல் (10 ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்க் குழுக்களுடனான சந்திப்பில் ரெலவ்சன்.

## கிழக்கு வன்செயல்களுக்கு மூன்றாவது சக்தி காரணமா? விசாரணை நடத்த வேண்டும்!

### கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் இடம்பெற்ற வன்செயல்களுக்கு மூன்றாவது சக்திதான் காரணம் என்று கூறுகிறார்கள். இது நடக்கமுடியாத காரியம் என்று குறிப்படமுடியாது. இது குறித்துப் பரிசீலிக்கவேண்டும் என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் - பல்வேறு தரப்பினரையும் சந்தித்து, கிழக்குச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்தார். இந்தச் சந்திப்புப் பற்றி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதுபோன்ற மூன்றாவது சக்தி எவ்வாறு இலங்கை இராணுவத்துக்கும், கடற்படைக்கும், விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முன்பள்ளி விளையாட்டுப் போட்டி


புத்தூர் . கிழக்கு, மகாத்மாஜீ முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டி - இன்று பிற்பகல் 1 மணிக்கு மகாத்மாஜீ விளையாட்டு மைதானத்தில், தலைவர் சி.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். செயலக கணக்காய்வு அத்தியட்சகர் பெ.தம்பிராசா கலந்துகொள்ளவுள்ளார்.

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

# விடைக்குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| (1) | 1 | (24) | 3 |
| (2) | 2 | (25) | 3 |
| (3) | 4 | (26) | 4 |
| (4) | 3 | | |
| (5) | 4 | | |
| (6) | 1 | (27) | 4 |
| (7) | 2 | (28) | 1 |
| (8) | 2 | (29) | 4 |
| (9) | 1 | (30) | 2 |
| (10) | 1 | (31) | 3 (4 ஆம்விடை) |
| (11) | 3 | (32) | 2 |
| (12) | 4 | (33) | 3 |
| (13) | 2 | (34) | 16km |
| (14) | 3 | (35) | 2 kg |
| (15) | 2 | (36) | 30 |
| (16) | 3 | (37) | 6 |
| (17) | 2 | (38) | 2 |
| (18) | 3 | (39) | 2 |
| (19) | 4 | (40) | 2 |
| (20) | 2 | (41) | 1 |
| (21) | a | (42) | 1 |
| (22) | e | (43) | 1 |
| (23) | s | (44) | 3 |




P.உமாசங்கர் Bcom.spl .Tr .com
ஆசிரியர் பொது அறிவு நுண்ணறிவுத்துறை.

## சிறுவர் கலைக்கூட விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இளவாலை திருமறைக் கலா மன்ற "சிறுவர் கலைக்கூட" மாணவர்களின் விளையாட்டுப்போட்டி- நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு - பிரதமவிருந்தினராக மாரீசன்கூடல் பங்குத்தந்தை ஜே.நிக்ஸ்சன் டொறக்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

## ஸ்ரீ வடபத்திரகாளி ஆலய சங்காபிஷேகம்

(உடுவில்)

அராலி கிழக்கு - ஓடையம்பதி ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த சகஸ்ரநாம சங்காபிஷேகம், நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி, மாலை அம்பாள் திருவீதி உலா இடம்பெறும். (101)

நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
சரத்குமார், சிம்ரன் நடித்த
அரசு
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
THE PEACE KEEPER
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு
சித்தார்த், ஹரிணி, விவேக் நடித்த
பாய்ஸ்



காட்சிநேரம்
10.30, 2.30, 6.30.9.30 (பு.நே)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1284)

# தென்மராட்சிப் பிரதேசத்திற்கு பகுதிபகுதியாக மின்விநியோகம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசங்களில், இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படாத இடங்களுக்குப் பகுதிபகுதியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் - கைதடி, மட்டுவில், சாவகச்சேரி, அரசடிச் சந்தி, மீசாலை, கொடிகாமம் ஆகிய இடங்களுக்கு முதலில் மின்சாரம் வழங்கும் நடவடிக்கையில் மின்சாரசபை ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

யுத்த அனர்த்தத்தின்போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள், மிதிவெடிகள் ஆகியவற்றினால் அப்பகுதியில் மின்சார வேலைகள் செய்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. தற்பொழுது கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அப்பகுதியில் உள்ள வெடிபொருட்களை அகற்றிக்கொடுத்ததன் மூலம், மின்சார சபையினர் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவியாக அமைந்துள்ளது. தற்போது ஏற்பட்டிருக்கும் மின்சார வேலைகள் அடுத்த மாத நடுப்பகுதியளவில் முடிந்துவிடுமெனவும், தென்மராட்சி முழுவதும் மின்சாரம் பெறக்கூடியதாக இருக்குமெனவும் மின்சாரசபை பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

# அடுத்தமாதம் முதல் பஸ்கட்டணம் அதிகரிப்பு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் கட்டணங்கள், எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளதாக, வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் க.மணிவாசகம் அறிவித்துள்ளார். ஆயினும் - 3 ரூபா 4 ரூபாவாக இருந்த பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை.

அதேவேளை - அடுத்த மாதத்திற்கான பருவகாலச்சீட்டுக்கள், புதிய கட்டணத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகரிக்கப்பட்ட பஸ் கட்டண விபரங்கள் வருமாறு -

5.00 - 6.00, 6.00 - 7.00, 7.50- 9.00, 9.00 - 11.00, 10.00 - 11.50, 10.50 - 13.00, 11.50 - 14.00, 12.00- 15.00, 13.00 - 16.00, 14.00 - 17.00, 14.50 - 17.50, 15.00 - 18.00, 16.00- 19.50, 17.00 - 20.00, 18.00 - 21.00, 18.50 - 22.00, 19.00 - 23.50, 20.00- 25.00, 21.00 - 25.50, 22.00 - 26.00, 23.00 - 27.50, 24.00 - 29.00, 25.00- 30.00.

## நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

- எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப் பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

சுலபமாக - சொகுசாக - சிக்கனமாக

சிங்கப்பூர் சுற்றுலா



யாழ்ப்பாணத்திலிருந்து ஒருநாளில் சிங்கப்பூர்




- 31.08.2003 இல் எக்ஸ்போ எயர் விமானம்மூலம் இரத்மலானை செல்ல, 01.09.2003 இல் SQ 401 மூலம் 1.35 மணிக்கு சிங்கப்பூர் செல்ல.
- யாழ்ப்பாணம் - இரத்மலானை - கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் இலவச தொடர்பு கட்டுநாயக்கா - கட்டுநாயக்கா - இரத்மலானை - யாழ்ப்பாணம்
- சிங்கப்பூர் - தங்கும் SUMMERVIEW HOTEL - சிங்கப்பூர் இலவச போக்குவரத்து
- SUMMERVIEW HOTEL 3 நாள் இலவச தங்குமிடவசதி. (ஒருஅறை- பதிவுவேண்டும் - இருவர்/மூவர்) காலை உணவு இலவசம்.

04.09.2003 - சிங்கப்பூர் விமான நிலையம் - 19.00 மணி
05.09.2003 - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் எக்ஸ்போ எயர்மூலம் மு.ப. 11.45 மணிக்கு பலாலி விமான நிலையம்.

இத்தனை வசதிகளுடனும் கூடிய உல்லாசப்பயணம் செய்வதற்கு

போக்குவரத்துக் கட்டணம்

- ரூபா 45, 750 (ஒருவருக்கு)
- ரூபா 30, 000 (சிறுவர்களுக்குத் தனிப்படுக்கை இல்லை)
- ரூபா 37, 000 (சிறுவர்களுக்குத் தனிப்படுக்கை வசதி)

*சிங்காரச் சீமையிலே சொர்க்கம் போன்ற அழகுமிகு இடங்களுக்குச் சுற்றுலா செல்ல வசதிகள் செய்து தரப்படும். இவற்றுக்குரிய கொடுப்பனவுகளை நீங்களே செய்யவேண்டும்.*

இனி ஏன் தயக்கம்? சகல விபரங்பகளுக்கும் உடனே தொடர்பு கொள்ளவும்.

COS MOS MARKETING SERVICES
200, K.K.S. ROAD,
JAFFNA.
T.P. 222 - 5461
(சி-1414)

முற்றிலும் Japan தயாரிப்பான Sony, National T.Vக்கள் 14", 16", 19", 20", 21", 25", 26", 29", மற்றும் வீடியோ டெக், செற்றப் ரேடியோக்கள் அதற்கான உதிரிப்பாகங்களும், சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



நீங்கள் நாடவேண்டிய இடம்

SHAN MULTI TRADE CENTRE
150, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



(1330)

## வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு

நவம்பர் மாதம் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில், கணிசமான அளவு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று, அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் நிறுவனங்களில் பல வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன் முதற்கட்டமாக -மாத்தளையில் உள்ள நால்ல என்ற இடத்திலும், பொலநறுவைப் பிரதேசத்திலும் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு, 7500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவிருப்பதாகவும், இதே வேளை - 250 பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பியினரின் கூட்டணி;
# புதன்கிழமைப் பேச்சிலும் இறுதிமுடிவில்லை!

ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டணியை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தை, நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இரண்டு தரப்புக்களுக்கும் இடையில், குறிப்பிட்ட காலப்பகுதியில் பேச்சுவார்த்தை நிறைவு செய்யப்படவேண்டும் என்ற அடிப்படையில், இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா - செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கு, இரு தரப்பும் இணங்கவேண்டும் என்ற கருத்தை இந்தச் சந்திப்பில் முன்வைத்தார்.

ஜே.வி.பியின் இந்த கால நிர்ணயம் தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளார்.

இதுவரை காலமும் ஜே.வி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையே சாதாரண பேச்சுக்களே இடம்பெற்றன. இந்தப் பேச்சுக்களை தவிர - தேசிய இனப்பிரச்சினை, இனப்பிரச்சினையில் நோர்வே ஏற்பாட்டாளர்கள் தொடர்பான கருத்து நிலை, போர்நிறுத்த கண்காணிப்புக்குழு விவகாரம் முதலிய விடயங்கள் பற்றி, இரு தரப்பும் கருத்து ஒற்றுமையை இதுவரை எட்டவில்லை.

இது இவ்வாறு இருக்க, ஜே.வி.பி., பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய இரு தரப்புக்கும் இடையே - இனி வருகின்ற தேர்தல் காலங்களில் எந்தவிதமான உடன்படிக்கைதளை செய்வது என்பது தொடர்பான, பேச்சுவார்த்தைகளும் அதற்கான ஒரு இணக்கப்பாடும் விரைவில் ஏற்படும் என இரு தரப்பினரும் நம்பிக்கை தெரிவித்தனர்.

## மேஜர் தாக்கியதில் இராணுவ கப்டன் வைத்தியசாலையில

(கொழும்பு)

இராணுவப்பொலிஸ் மேஜர் தரத்திலுள்ள அதிகாரி கப்டன் தரத்திலுள்ள இராணுவ அதிகாரியைத் தாக்கியதில், அவர் சிகிச்சைக்காக இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

இராணுவப் பொலிஸில் கடமையாற்றும் இராணுவ அதிகாரி ஒருவரின் திருமணம் - கண்டி ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றவேளை, அதிகம் மது போதையில் இருந்தமையால் - இந்த மேஜர் தரத்திலுள்ள அதிகாரி, கப்டனைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவப் பொலிஸார் இந்தச் சம்பவம் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சமாதான பெயரால் கிடைத்த 180 மில்லியன் டொலர் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு!

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளின் பலனாகக் கிடைத்த நிதியில் - 180 மில்லியன் டொலர்களை வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு செலவிடப்படும் என்று, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மின்சாரம், சுகாதாரம், கொழும்பு-மாத்தறை வீதி திட்டங்களுக்கே இந்த நிதி செலவிடப்படவுள்ளதாக அவர் கூறினார்.

எதிர்காலத்தில் நாட்டு மக்கள் நன்மை அடைய வேண்டுமென்றால்-புரிந்துணர்வு உடன்படிக்கையும், புலிகளுடனான சமாதான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்பாக, அவற்றை முன் உரிமைப்படுத்தப்பட வேண்டும்.

இது பற்றிப் புலிகளிடம் கலந்தாலோசிக்க வேண்டும். ஆகவே, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துரையாடி, வடக்கு - கிழக்கில் நிவாரண அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் - பாரிஸில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இன்னும் சில தினங்களில் முடிவடையும். அவர்களுடைய பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இதன்பின், சமாதான முயற்சிகள் நடைபெற வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதனைத் தொடர்ந்துதான், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் என்றார்.

தெற்கில் அரசு, 180 மில்லியன் டொலர்களை செலவிடுவதற்கு முன்வந்திருப்பது - ஜே.வி.பியின் எதிர்ப்பும், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களுமே காரணம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

(01)

# பாலியல் கல்வி கற்பித்த போலி ஆசிரியர் கைது!

ஆசிரியர் என்ற போர்வையில் - கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்களுக்கு, பாலியல் சம்பந்தமான பாடங்களைக் கற்பித்துவந்த இளைஞர் ஒருவரை, பாடசாலை பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பெரும்பாலும் ஆசிரியர்கள் பாடம் நடத்தாத நேரத்தில், இவர் மாணவர்களுக்குப் பாலியல் கல்வி சம்பந்தமான பாடங்களைக் கற்பித்து வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல தந்திரங்களை உபயோகித்து பாடசாலைகுள் நுழைந்த இவர், முதலாம் வருட மாணவர்களுக்கு பாலியல் கல்வி கற்பித்தபோது, மாணவர்கள் ஆசிரியரிடம்முறைப்பாடு செய்தததையடுத்து, அவர் கைது செய்ப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# சுகாதார அமைச்சுக்கு எதிராக; அடிப்படை உரிமைமீறல் வழக்கு!

### சுகாதாரசேவைகள் சங்கம் தாக்கல்

சுகாதார சேவைகள் சங்கம், சுகாதார அமைச்சுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

குடும்பநல மாதர்களுக்கு சீருடைகள் வழங்குவது தொடர்பாக, நடைமுறையிலுள்ள திட்டங்கள் குறித்தே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குடும்பநல மாதர்களுக்கு வழங்கப்படும் சீருடைகள் உரியகாலத்தில் உரியமுறையில் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு, சுகாதார அமைச்சுக்கு எதிரான மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, குடும்பநல மாதர்கள் தமது பணியைச் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அந்தக் கஷ்டங்களைப் போக்கும் வகையில் - இனி வருங் காலங்களில் சுகாதார அமைச்சர் செயற்பட வேண்டும் என, அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக-சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் மேலும் இரு அதிகாரிகள் உள்ளடங்கிய மூவர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# மும்பாய் குண்டுத் தாக்குதல்கள்; சந்திரிகா, ரணில் கவலை தெரிவிப்பு!

(கொழும்பு)

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரான மும்பாயில், கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் - சுமார் 50 பொதுமக்கள் கொலலப்பட்ட சம்பவத்துக்கு, இலங்கையின் அரசியல் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் - இந்தியாவில் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளதுடன், அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுப்பதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் - பொதுமக்களைக் குறிவைத்து மீண்டும் மும்பாயில் தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்திருப்பதுடன், உயிரிழந்த பொதுமக்களுக்கு அனுதாபமும் தெரிவித்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், இந்தத் தாக்குதலுக்கு கவலை தெரிவித்து- இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மறிச்சுக்கட்டி ஊடான புத்தளம் வீதியை திறக்க வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் எதிர்ப்பு!

மன்னார் - மறிச்சுக்கட்டி ஊடான புத்தளம் - கொழும்பு பாதையினை திறக்க, மன்னார் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூருக்கு, இவர்கள் அனுப்பிய மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நாட்டு சூழ்நிலையில், இந்தப்பாதை திறப்பு பொருத்தமற்றது என கருதுகின்றோம். நிரந்தர சமாதானத்தீர்வு ஒன்று ஏற்படும் வரை, இந்த முயற்சி நிறுத்தப்பட வேண்டும் என்பது எமது தீர்க்கமான முடிவு.

1980 ஆம் ஆண்டு இந்தப் பாதை திறக்க முயற்சிகள் எடுக்கப்பட்டபோது, அதனை நாங்கள் தடுத்து நிறுத்தியிருந்தோம். அப்போது இருந்ததைவிட மிக மோசமாகியிருக்கும் இன்றைய சூழ்நிலையில், இந்தப் பாதை பாவனைக்கு விடப்பட்டால் - மிகமோசமான பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும். எனவே, இந்த முயற்சியைக் கைவிடுமாறு மிகவும் வினயமாகக் கேட்டுநிற்கின்றோம். மாறாக, மறுத்து நீங்கள் இம்முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டால் - மாவட்டம் தழுவிய அளவில் எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு, மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ஆர்.எ.ஜீவரட்ணம், உபதலைவர் தே.பி.சித்தாந்துரை ஆகியோர் ஒப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பியுள்ளனர்.

இந்த மகஜரின் பிரதிகள் - மன்னார் ஆயர், மன்னார் அரச அதிபர், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் போன்றோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதையினை மீளத் திறப்பதற்கு, வன்னி மாவட்டப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் மும்முரமாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(201)

# குற்றச் செயலுக்கான காரணங்களை கண்டறிய மூன்று பேர் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு!

### ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவு



(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களுக்கான காரணங்களைக் கண்டறியும் பொருட்டு, மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை- ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்துள்ளார்.

குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து - அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி பணித்திருக்கின்றார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக - ஜனாதிபதி சட்டத்தரணியும், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியுமான எஸ்.டபிள்யூ.வடுகொடபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், பொதுநிர்வாக சேவையில் இருந்து ஓய்வுபெற்ற அதிகாரி சந்திரா விக்கிரமசிங்க, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பிராங் டீ சில்வா ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதிக்கும் வகையில் - கடந்த இரண்டு தசாப்த காலத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றனவா என்று, கண்டறியும் பொறுப்பு இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு, பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள் எவராவது உடந்தையாக இருந்தார்களா என்பதையும், ஆணைக்குழு கண்டறிய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எவை என்பது பற்றி பிரேரிக்கவேண்டும் என, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஆணைக்குழு தமது அறிக்கையை மூன்றுமாத காலத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




நல்லை ஆதீன மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை - பிரித்தானிய சைவத்திருக்கோயில் சபை ஒன்றியத்தின் ஆதரவுடன், யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நடத்திய வலுவிழந்தோருக்கான சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

# தெல்லிப்பளை வைத்தியசாலை புனரமைப்பு நிதி திரும்பும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு, இராணுவத்தினர் தடைவிதித்து வருகின்றனர். இதனால், இவ்வைத்தியசாலைப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி, திரும்பும் அபாயம் உருவாகியுள்ளது.

மேற்படி வைத்தியசாலையைப் புனரமைக்கவிடாது, இராணுவத்தினர் தொடர்ந்தும் தடுத்து வருகின்றனர். இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாட்டால், பொதுமக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

கடந்தகாலப் போரினால் மிகவும் சேதமடைந்தநிலையில் இயங்கி வரும் இவ்வைத்தியசாலை, தற்பொழுது இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ளது. இதனால், இவ்வைத்தியசாலையைப் புனரமைப்புச் செய்ய, எந்தவொரு கட்டடப் புனரமைப்புக் குழுவும் முன்வராதுள்ளன.

இந்த வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிக்கென வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களாலும், ஏனைய உதவிவழங்கும் நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட காசோலைகள் - காலாவதியாகும் நிலையில் உள்ளன. இராணுவத்தினர் இவ்வைத்தியசாலையைப் புனரமைக்கவிடாது தடுத்து வருவதே இதற்குக் காரணமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பூஜைகள் அற்றநிலையில் நெடுந்தீவில் ஆலயங்கள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் உள்ள இந்து ஆலயங்கள் - கடந்த சில வாரகாலமாகப் பூஜைகளற்ற காரணத்தினால் மூடப்பட்டநிலையில் உள்ளன.

அங்குள்ள ஐந்திற்கு மேற்பட்ட ஆலயங்களில் பூசகராகப் பணியாற்றியவர், குடும்பத்துடன் வெளியேறியமையே இதற்குக் காரணம்.

கடந்த காலங்களில் பெருமளவு ஒதுக்கீட்டு நிதிகளைப் பெற்று, புனரமைக்கப்பட்ட ஆலயங்கள், இன்று பூட்டியநிலையில் இருப்பதனால் - மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளதுடன், புதிய பூசகரை அப்பகுதிக்கு அழைப்பதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சித்து, ஆலயங்கள் மீண்டும் திறக்கப்படுமாவெனப் பக்தர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். (113)

# 12 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் தனித்திருந்த பன்னிரண்டு வயதுச் சிறுமி - 68 வயது வயோதிபர் ஒருவரால் பாலியல் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த மேற்படி சிறுமி, சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாயும், தந்தையும் மரண வீட்டுக்குச் சென்றவேளை - வீட்டில் சிறுமியைத் தனியே விட்டுச்சென்றுள்ளனர். தனித்திருந்த சிறுமியை அயல் வீட்டிலிருக்கும் அறுபத்தெட்டு வயது வயோதிபர், பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்து, நேற்று பருத்தித்துறை நீதிமன்றின் முன் ஆஜர்படுத்தியபோது இவரை, எதிர்வரும் எட்டாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (202)

# ஹாட்லி, மெதடிஸ்த பாடசாலைகளுக்கு முன்அனுமதி பெற்றே செல்லமுடியும்!

## படைத்தரப்பு அறிவிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்வோர், முன்அனுமதி பெறவேண்டும் எனப் படையினர் அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இரு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மட்டுமே இந்தப் பாதுகாப்பு வலயத்திலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லமுடியும்.

இவர்களைத்தவிர பெற்றோர், பழைய மாணவர்கள், மற்றும் திணைக்கள அதிகாரிகள் போன்றோர், வாரத்தில் புதன்கிழமை மட்டுமே செல்லமுடியும். ஏனைய தினங்களில் எவரும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், இவ்வாறு செல்வோர் - முன் கூட்டியே பாடசாலை அதிபரின் சிபாரிசுடன், படை அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டும். இதன பின்னரே உரியவர் செல்லமுடியும் எனப் படையினர் தெரிவித்தனர்.

இந்த இரு பாடசாலைகளின் சுகாதாரநிலை தொடர்பாகப் பார்வையிடச்சென்ற பருத்தித்துறை பொது சுகாதார பரிசோதகர் ஒருவர்- சோதனைச்சாவடியில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இந்த நிலை தொடர்பாகப் பிரதேச செயலரிடம் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை - இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருவதாகவும் திணைக்கள அதிகாரிகள் சிலர் விசனம் தெரிவித்து வருகின்றனர். (202)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை நல்லூர் பிரதேசத்தில் அதிகரிப்பு!

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேசசபைப் பகுதியிலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது. சிறு வீதிகள், ஒழுங்கைகள், குறிப்பாக பிரதான வீதிகளில் கட்டாக்காலி நாய்கள் தமது இஷ்டம் போல் ஓடித்திரிகின்றன. அதனால், வீதியில் செல்லும் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன் நாய்க்கடிக்கும் இலக்காகின்றனர்.

கட்டாக்காலி நாய்களினால், வீதியால் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதுடன், போக்குவரத்து நெரிசல்களை எதிர் நோக்க வேண்டியும் இருக்கிறது.

நல்லூர் பிரதேசசபை மற்றும் ஏனைய பிரதேசசபை நிர்வாகத்தினர் கட்டாக்காலி நாய்களுக்கு நஞ்சூட்டப்பட்ட இறைச்சியைப் போடுதல், நாய்களை சுருக்குக் கம்பி மூலம் பிடித்து அழித்தல் ஆகிய நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துகின்றனர்.

தற்போது அதிகரித்துள்ள கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நல்லூர்ப் பிரதேச சபையினர் எதிர்வரும் ஒவ்வொரு புதன்கிழமையும் சுருக்குக் கம்பி மூலம் நாய்களை பிடிக்கும் முறையை செயற்படுத்தவிருக்கின்றனர். அதனால், இதுவரை தமது வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு உரிமத் தகடு பெறாதவர்களைப் பெற்றுக் கொள்ளுமாறும், வளர்ப்பு நாய்களை வீதிகளில் கண்டபடி அலையவிட வேண்டாமென்றும் அவ்வாறு வீதியால் திரியும் வளர்ப்பு நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டால், அதற்குத் தாம் பொறுப்பாளிகள் அல்ல, என்றும் நல்லூர்ப் பிரதேசசபை செயலாளர் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர், அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்திய முழுநிலா நாள் கருத்தரங்கில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ நிர்வாகத்துறையைச் சேர்ந்த தேவறஞ்சினி சிவாஸ்கரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.



வடக்கு - கிழக்கு மாகாண்மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப்பிரிவில் யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சாம்பியனாகியது. அதிபர் ச.சிவனேஸ்வரன் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன் வீராங்கனைகளைப் படத்தில் காணலாம். இவ்வணியினர், 2002 ஆம் ஆண்டிலும் மாகாணமட்ட சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இடமிருந்து வலமாக இருப்பவர்கள் - செ.செந்தில்வாணி (பொறுப்பாசிரியர்), நா.கேதீஸ்வரன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்), த.சுலக்சனா (உபதலைவர்), ச.சிவனேஸ்வரன் (அதிபர்), தி.சங்கீதா (அணித்தலைவி), கு.விமலன், த.ரேவதி (பொறுப்பாசிரியர்கள்).

இடமிருந்து வலமாக நிற்பவர்கள் - மா.சுவீற்றி, மு.துளசிமலர், யோ.கஜேந்தினி, சாளற்வதனி, சோ.பிரிந்தா, நி.கிருசாந்தினி, ஜெ.கஜிதா ஆகியோரை படத்தில் காணலாம்.

### வீதிகளை சிரமதானம் செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள மல்லாகம் 8 ஆம் கட்டை ஒழுங்கை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள காங்கேசன்துறை வீதியையும் - தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, துப்புரவு செய்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு வலி.வடக்குப் பிரதேசசபைச் செயலாளர் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (68)

### பஸ்களில் திருட்டுக்கள் அதிகரிப்பு

வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ்களில், திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. இளவாலை பகுதியில் வைத்து நடத்துநர் ஒருவரின் பணப்பை களவாடப்பட்டுள்ளது. அத்துடன், ஆலங்குழாய் பகுதியில் வைத்து வேறொரு நடத்துநரின் கைப்பை ஒன்றும் களவாடப்பட்டுள்ளது. கைப்பையினுள் பற்றுச்சீட்டுக்களின் பிரதிகள் அடங்கியிருந்ததெனக் கூறப்படுகிறது.

இத்திருட்டுக்கள் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தபாலக ஊழியர்களுக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் நிலவும் சிற்றூழியர்களுக்கான பதிலாட்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பத்திகதி- எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் செ.சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பதிலாட்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பத் திகதி கடந்த 25 ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

### வீதிகள் புனரமைப்பு

"நிகொட்" வேலைத்திட்டத்தின் கீழ் - வலி.வடக்கில் 2 மில்லியன் ரூபா செலவில் வீதிகள் திருத்தப்படுகின்றன. இதனடிப்படையில் - தம்பனை சுடலை வீதி, இளவாலை மாரீசன் கூடல், சீந்திப்பந்தல், குசுமாந்தறை ஆகிய வீதிகளைச் செப்பனிடும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.


வாழ்க வளமுடன்

1 2 HAPPY BIRTHDAY

ஏழாவது அகவையில்

பெயர் : மு.விதுர்ஷன்
முகவரி: கற்கோவளம்,
பருத்தித்துறை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# சிறுபிள்ளைகளுக்கான கணித எண்ணக்கருக்களை




**பாலர் பாடசாலை ஒன்றை நடத்த விரும்புகிறவர்களிடம் - பாசம் இருக்க வேண்டும். அந்த உணர்வு இயல்பாகவே வரவேண்டும். பணத்திற்காகவும், பொழுது போக்கிற்காகவும் இதனை நடத்தக்கூடாது என்கிறார் - சோமசுந்தரம் பாலர் பாடசாலை ஆசிரியையாகவும், யாழ். பிரதேச செயலகப் பிரிவு, முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவியாகவும் இருக்கும் சௌந்தரி வொட்சன் ரட்ணம். அவருடனான சந்திப்பு இது.**


சௌந்தரி வொட்சன் ரட்ணம்

**பாலர் பாடசாலை ஒன்றை நடத்துவதற்கு ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது? அதற்குரிய தகைமைகளை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?**

எனக்கு எப்பவும் சின்னப் பிள்ளைகளுடன் பழகுவதென்றால் விருப்பம். நான் இங்கிலாந்தில் கல்வி பற்றிய இளமாணிப் பட்டம் கற்றுக்கொண்டிருந்தபோது, ஆசிரியர்களுக்கான பயிற்சியும் எடுத்தேன். அவ்வாறு போய்க் கற்றதன் மூலம்தான், அதில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. எங்களுடைய பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவேணும் என்று நினைத்ததால், படிப்பை முடித்து விட்டு யாழ்ப்பாணம் வந்து, 1984 ஆம் ஆண்டு தோழி ஒருவரின் உதவியுடன் இந்தப் பாலர் பாடசாலையை ஆரம்பித்தேன். அயலில் உள்ள 9 பிள்ளைகள் முதலில் வந்தார்கள். பின்னர், படிப்படியாகச் சேர்ந்து, தற்போது 127 பேர் படிக்கிறார்கள். பிள்ளைகள் கூடிக் கொண்டுவர, ஆசிரியர்மாரையும் அதிகரிக்க வேண்டிவந்தது. இப்பொழுது 6 ஆசிரியர்கள் உதவியாக இருக்கிறார்கள்.

பல்கலைக்கழகத்தில் 48 மணித்தியாலப் பயிற்சி கொடுத்தார்கள். யாரும் போய் பங்குபற்றலாம். அரசசார்பற்ற நிறுவனம் மூலம், உள்ளூராட்சித் திணைக்களம் சில பயிற்சிகளை வழங்கியது. அது ஏற்கனவே ஆசிரியராக இருப்பவர்களுக்கானது. ஏனைய நிறுவனங்கள் பயிற்சி கொடுக்கும்போது, குழப்பம் ஏற்படுகின்றது. ஆனபடியால், ஒரு பயிற்சி டிப்ளோமா என்று வைத்தால் உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

தற்கால சூழ்நிலையில், இப்படியான ஒரு நிர்வாகத்தை நடத்துவது அவ்வளவு சுலபமில்லை. ஆனால், எங்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் சொல்லுவார்கள் - எனக்கு எங்கட தாத்தாவினுடைய மனோதிடம்தான் வந்திருக்கு என்று.

எனக்கு ஒரு விடயத்தைத் தொடங்கினால், அரைகுறையாகவிடப் பிடிக்காது. திருப்திகரமாகச் சரியாக நடத்தி முடிக்க வேண்டும். அப்பதான் நாங்கள் எதிலையும் வெற்றி பெறமுடியும். எத்தனையோ தடைகள், கஷ்டங்கள் வந்தன. அதற்கு மத்தியில் அதை நான் கடந்து, நடத்த முடியுமாக இருந்தது - என்னுடைய தாத்தாவின் மனோதிடம் எனக்கும் இருந்ததாலதான். எனக்கு இயல்பாகவே ஒருபிடிவாதக் குணம் இருக்கு. வெற்றி அடையவேண்டும், தோல்வி காணக்கூடாது என்று.

அதோட, நானும் ஒரு பெண். எனக்கு பெண்களினுடைய கஷ்டம் விளங்கும். ஆனபடியால, கணவன்மாரின் உதவியற்ற பெண்களைத்தான் உதவிக்கு வைத்துள்ளேன். அவர்களுக்கு வீட்டுப் பிரச்சினைகள் எதுவும் இருக்காது. முழுமனதாகப் பாடசாலைக்குத் தம்மை அர்ப்பணிப்பார்கள். அவர்களின் உதவி இல்லாமலும் நான் இந்தப் பாடசாலையை நடத்தமுடியாது.

மற்றது, இதை நான் இவ்வளவு திறமையாக நடத்துவதற்கு - பெற்றோரும் காரணமாக இருக்கிறார்கள். அவர்கள் - எனக்குப் பல இடர்பாடுகள் வந்தபோது, பெற்றோர்தான் எனக்குப் பக்கபலமாக இருந்தார்கள். அது ஒரு வகையில் மனவுறுதியைத் தந்தது. அதைப் பெறுவதற்கு - நாங்களும் பெற்றோருடன் நல்ல உறவு வைத்திருக்க வேண்டும். பெருமைகூடாது. தாழ்மைதான் தேவை. நர்ங்கள் தாழ்மையாக அவர்களுடன் பழகினால், அவர்களும் எங்களுடன் நல்லாப் பழகுவார்கள்.

பாடசாலையை அவர்கள் ஆதரிக்கிறார்கள், அன்பு செலுத்துகிறார்கள். அதனால்தான், என்னால் திறமையாக எந்த பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து, இந்தப் பாடசாலையை நடத்தமுடிகிறது.

**பாலர் பாடசாலை ஆசிரியைக்கு இருக்க வேண்டிய குணாதிசயங்கள் பற்றி?**

பாலர் பாடசாலை ஆசிரியை இரண்டாவது அம்மா என்று கூறலாம். பிள்ளை பிறந்து 3 வருடங்கள் அம்மாவுடன் இருக்கும். அதன்பிறகு எங்களோடதான். அம்மாபோல கவனிக்க கடமை. படிப்பிக்கும் போதும், பெரியாருக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படிய வேணும் என்றுதான் சொல்லிக்கொடுக்கிறேன். கீழ்ப்படிஞ்சா, அந்தப் பிள்ளை சமுதாயத்தில் நல்லாவரும்.

**பாலர் பாடசாலைக்கு போகாத பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பார்களா?**

சேர்ப்பார்கள். ஆனால், பிள்ளை கஷ்டப்படும். ஆண்டு ஒன்றிலேயே எழுதத்தெரிய வேணும் என்றுதான், பாடசாலைகளில் எதிர்பார்க்கிறார்கள். சொல்வதெழுதல் கொடுக்கின்றார்கள். முழுத்தமிழ் எழுத்தும் கற்பிக்கிறார்கள. பழக்கவேண்டிய நிர்ப்பந்தம் - தவிர்க்க முடியாமல் பாடத்திட்டம் மூலம் ஏற்படுகிறது. இது நன்மையான விடயம்

தற்போது பெற்றோர் இருவரும் தொழிலுக்குப் போவதால், அவர்களுக்குப் பிள்ளைகளுடன் கதைப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. பிள்ளைகளைக் கொண்டுவந்து சேர்க்கும்போது, சொல்லுவார்கள் - "சரியான குழப்படி, சொல்வழி கேட்கிறார்கள் இல்லை, அடியுங்கோ" என்று.

ஒரு பிள்ளை குழப்படி செய்யுது எண்டால், அதற்கு முழுக்காரணமும் பெற்றோர்தான். பிள்ளைகளைவிட பெற்றோருக்குத்தான், நான் கூடுதலாகப் படிப்பிக்கிறன்.

ஒவ்வொரு நாளும் ஆகக்குறைந்தது அரை மணித்தியாலமாவது பிள்ளைகள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லி,

# கதை, விளையாட்டுக்கள் மூலமே கற்பிக்கவேண்டும்

வேணும். பாலர் பாடசாலை ஆசிரியைக்குப் பிள்ளைகளில் பாசம்வேண்டும். எங்களுடைய பிள்ளைகளுக்குச் செய்வதைப்போல, மற்றப் பிள்ளைகளுக்கும் செய்யவேணும். என்னு



டைய பிள்ளை என்று நடத்தவேணும். பிள்ளைகளை அறிந்து வைத்திருக்க வேணும். பிள்ளைகளுக்கும் சுதந்திரம் இருக்கு. அபிப்பிராயம் கேட்கவேண்டும். நாங்கள் பிழை விட்டாலும், அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேணும். திரும்பத் திரும்பப் பிழைகளைச் சுட்டிக்காட்டக்கூடாது. ஒரு ஆசிரியையின் தோற்றம், செயல்கள் எல்லாம் - பிள்ளைகள் ரசிக்கக்கூடியதாகவும், அதைப் பின்பற்றக் கூடியதாகவும் இருக்கவேண்டும். நீங்கள் என்ற சொல்லைத்தான் பாவிக்கவேண்டும். அநாவசியமாகத் தண்டிக்ககூடாது.

**சிறுவர்களுக்குக் கற்பிப்பது சிரமம் என்று நினைக்கிறோம். இவர்களை எவ்வாறு கையாளுகிறீர்கள்?**

பிள்ளைகளுக்குப் "படிப்பிக்கிறம்" என்ற சொல்லையே பாவிக்கக்கூடாது. கணித எண்ணக் கரு எல்லாம் - விளையாட்டு, கதை மூலம்சொல்லிக் கொடுக்கிறம். பிள்ளைகளுக்கு படிப்பிப்பது தெரியாமல் படிப்பிக்கவேணும். பிள்ளைகளைத் தண்டிக்கக்கூடாது. 'முடியாது' (**Don't**) என்ற சொல்லைப் பாவிக்கக்கூடாது. அந்தச் சொல்லை, தவிர்க்கவேணும்.

பிள்ளை ஜன்னலில் ஏறினால், ஏற வேண்டாம் என்று சொல்லக்கூடாது. ஏறினால் விழுந்து விடுவீர்கள், கால் உடையும், ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டிவரும். காய்ச்சல் மருந்து தருவினம், ஊசி போடுவினம், அம்மாவைத் தனியாவிட்டிட்டு, ஆஸ்பத்திரியில படுத்திருப்பீங்களா? என்றவுடன், அவர்கள் 'இல்லை' என்பார்கள். ஆனபடியால், நீங்கள் ஏறி விழுந்தால், இதுதான் நடக்கும். நீங்கள் கவனமாக இருக்கவேணும் எண்டால், அந்த பிள்ளை நாளைக்கு ஏறாது. ஏறாதை எண்டால், விளக்கம் இல்லை. நாளைக்குத் திரும்ப ஏறும். இந்த முறையைத்தான் கையாள வேணும்.

பிள்ளைகளை தண்டிக்கக்கூடாது. நாங்கள் கொடுக்கின்ற அதிகபட்ச தண்டனை- கரும்பலகையின் அடியில்போய் நிக்கச் சொல்வதுதான். கேட்டு, விசாரித்து, கதைத்து நீங்கள் அப்படிச் செய்தனீங்களா? ஏன் அப்படிச் செய்தனீங்கள்? என்று கேட்டா, அவையள் நாளைக்கு அப்படி செய்யமாட்டார்கள்.

பிள்ளைகள் கீழ்ப்படிகிறார்கள் இல்லை எனறால், தாயின் முக்கியத்துவத்தைச் சொல்ல வேணும். அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று கூட்டம் நடத்தும்போது சொன்னார்கள் - பிள்ளைகளுக்கு முழுச்சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்று.

ஆனால், திரும்பக் கூறினேன் எங்களுடைய கலாசாரம் வேறு. பெற்றோருக்குக் கீழ்ப் படிந்து இருக்கவேணும். அது பிள்ளைகளின்

இல்லை. உண்மையில், பாலர் பாடசாலை என்றால் - ப்ளே ஸ்கூல் (**Play School**) என்றுதான் பொருள்.

**பாலர் பாடசாலைக்கு, மாணவர்களை அனுப்பும் பெற்றோருக்கு என்ன அறிவுரை கூற விரும்புகிறீர்களா?**

கதைக்கவேணும். அப்பதான், பெற்றோரினுடைய குணங்களை, அவர்கள் பெறுவார்கள். நாள் முழுக்க வேற யாரோடையும் அவர்கள் இருந்தால், அவர்களைப்போல தான் வருவார்கள். மற்றது, பெற்றோர் - கூடாத வார்த்தைகளை வீடுகளில் பாவிக்கும்போது, அதை இங்கு வந்து பிள்ளைகள் பாவிப்பார்கள். அப்படி கதைக்கவேண்டாம் என்று அறிவுரை கூறுவேன்.

**மாணவர்களுடன் மறக்கமுடியாத சம்பவம் எதனையும் கூறமுடியுமா?**

நிறைய இருக்கு. முக்கியமாகப் பிள்ளைகளுக்குப் பகிடியள் விளங்க வேணும். எங்கட சின்னமும் - சூரியகாந்திப் பூத்தான். அவர்களின் முகமும் சூரிய காந்தி பூ மாதிரி மலர்ச்சியா இருக்க வேண்டும்.

**"பாலைக்காச்சிச் சீனி போட்டுப்**
**பருகத்தந்த அம்மா.**
**காலைத் தூக்கி கண்ணில் ஒற்றிக்**
**கட்டிக்கொஞ்சும் அப்பா"**

என்று ஒரு பாட்டு இருக்கு.

அதைப் பாடேக்க - ஒரு ஆண் பிள்ளை சொன்னார், "எங்களுக்கு அம்மா பால் காச்சிற இல்ல, அப்பா தான் காச்சிறவர். அப்பாதான் வீட்டில வேலை செய்யிறவர்" என்று. அம்மா வந்தபோது சொல்லிச் சிரித்தேன்.

நேர்காணல்: இரா-சுபோதினி

# சமையல் குறிப்புக்கள் சில...

* வேகவைத்த கரட் அல்லது பூசணிக்காயையும், பாதி வறுத்த துவரம் பருப்பையும், 4 பச்சை மிளகாய்களையும் வெட்டி, வெங்காயம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து அரைக்கும்போது, சட்னி சுவையாக இருக்கும்.
* மேலதிகமாய் இருக்கும் தேங்காய் – சட்னி கெட்டியான, புளித்த மோரில் கலந்து, கொதிக்கவைத்தால் – மோர்க் குழம்பு ஆகிவிடும்.
* கையில் நல்லெண்ணை தடவிக்கொண்டு, கருணைக்கிழங்கை நறுக்கினால், அரிப்பு உண்டாகாது.
* தேங்காய் துருவலை பொலித்தீன் பையில் போட்டு, குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால், சில நாட்கள்வரை அப்படியே இருக்கும்.

# பெண்களே! குதி உயர்ந்த செருப்புகள் வேண்டாம்!



★ குதிக்கால் உயர்ந்த, அதாவது ஹை - ஹீல்ஸ் செருப்புக்களைப் பெண்கள் அதிகநேரம் போட்டிருக்கக்கூடாது. இந்தவகைச் செருப்புக்களை அணியும் பெண்களுக்கு - குதிக்கால் வலி, முதுகு வலி என்பன ஏற்படுகின்றன.

★ முதுகு வலியைத் தவிர்க்கப் பெண்கள் ஹை - ஹீல்ஸ் செருப்புக்கள் அணிவதைத் தவிர்க்கவேண்டும்.

★ தொடர்ந்து குதியுயர்ந்த செருப்புக்களை அணிந்து வந்தால் - குதிக்கால் வலி, பாதத்தின் முன் பகுதியில் வலி, மூட்டு வேதனை போன்றவை தோன்றும். குதிக்கால் செருப் புக்களை அணிந்து நடக்கும்போது, முதுகெலும்பு வெளிப் புறமாகத் தள்ளப்படுகின்றது. இதனாலும், முதுகு வலி ஏற்படுகின்றது.

★ இதைவிடவும், பெரிய பாதிப்பு என்னவெனில் - காலின உட்பகுதியிலுள்ள நரம்புகளும், குறிப்பிட்ட தசைகளும் வெளிப்பகுதியை நோக்கித் தள்ளப்படுகின்றன.

இதனால், கால்களில் பலவீனம், கால்களின் சில பகுதிகள் மரத்துப் போதல் போன்றவைகளும் தோன்றக்கூடும்.

# இன்றைய காலகட்டத்தில்

# சாமத்தியச்சடங்கு அவசியந்தானா...?

**பெற்றோரே சிந்தியுங்கள்.** இன்றைய காலகட்டத்தில் சாமத்தியச்சடங்கு அவசியந்தானா..?

பெண்கள் முகம் கொடுக்கும் உளவியல் பிரச்சினைகளின் காரணிகளில் இந்தச் சாமத்தியச் சடங்கும் ஒன்றாக இருக்கிறது.

ஒரு பெண் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படும் பருவம் அவள் பூப்பெய்தும் பருவம்தான். இது பற்றிய சரியான புரிந்துணர்வு பல பெற்றோர்களிடம் இல்லை.

இந்தநிலையில் நாம் இது பற்றிப் பேச வேண்டிய தொரு கட்டாயத்தில் இருக்கி றோம்.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் இத்தனை தூரம் நாம் பல்வேறு துறைகளிலும் வளர்ந்து விட்ட நிலையில் சாமத்தியச் சடங்குகள் அவசியந்தானா? சாமததியச் சடங்கு எமது கலாசாரத்தில் ஏன் இடம் பிடித்துக் கொண்டது? போன்றதான கேள்விகளுக்கு மிகத் தெளிவான கருத்துக்களோ அல்லது விளக்கங்களோ எனக்கு இதுவரை சரியான முறையில் கிடைக்கவில்லை. பல பெரியவர்களுடன் பேசிப் பார்த்தபோது, ஒவ்வொருவரும் சொன்ன காரணங்கள் ஒவ்வொரு விதமாகவே இருந்தன.

☞ ஆண், பெண் பாகுபாடின்றி விளையாடித் திரிந்தவளை ஆண்களில் இருந்து பிரித்து வைப்பதற்காக.

☞ எனது வீட்டில் ஒரு குமர் இருக்கிறாள். மணமகன்மார் பெண் கேட்டு வரலாம் என்பதைத் தெரியப்படுத்துவதற்காக.

☞ ருதுவானால்தான் அவள் முழுமையான பெண் என்ற உடல் ரீதியான அங்கீகாரம் சமூகத்திடம் இருந்து கிடைக்கும் என்பதற்காக. என்பது போன்றதான பல்வேறுபட்ட காரணங்கள் சொல்லப்பட்டன.

இப்படியான கருத்துக்களின் மத்தியில் இவள் இனி உங்கள் பிள்ளை நீங்கள்தான் அவளைக் காக்க வேண்டும் என்று சொல்லி ஊர்மக்களிடம் பிள்ளையை ஒப்படைப்பதற்காக. சாமத்தியச் சடங்கு நடக்கிறதென்றும் ஒரு புலம் பெயர்ந்த பெரியவர் சொன்னார்.

இப்படியானதொரு கருத்தைக் கேட்க.. சிரிப்பாக இல்லை.... கற்றவர் ஆழ்ந்து ஆராய்ந்து ஆக்கபூர்வமானதொரு கருத்தை ஆணித்தரமாகத் தருவார் என்று தான் எதிர்பார்த்தேன். கருத்துக்கள் தருவது அவரவர் சுதந்திரம். ஆனால், எம்மத்தியில் உள்ள கற்றவர்கள் இப்படியான உப்புச் சப்பற்ற கருத்துக்களைத் தருவது எமது சமூகத்தை எமது கலாசாரத்தை எமது பண்பாட்டை நாமே அவமானப்படுத்துவதற்குச் சமானமாகிறது.



குறைபிடிக்கவும, குற்றம் பிடிக்கவும், பருவம் பார்த்துத் தருணம் தேடிப் பெண்ணைச் சீரழிக்கவுமே சமூகத்துள் ஒரு கழுகுக் கூட்டம் காத்திருக்கும். ஊரவர்தான் இப்படியென்றால் உள்ளுக்குள் அதைவிடக் கேவலம்.

அநேகமான பாலியல் வன்முறைகளும், பாலியல் துஷ்ப்பிரயோகங்களும் வீட்டுக்குள்தான் நடக்கின்றன. மாமாவால், சித்தப்பாவால், அக்காவின் கணவனால், அப்பாவின் நெருங்கிய நண்பனால்..... இப்படித்தான் பெரும்பான்மையான பாலியல் வன்முறைகளும் பாலியல் துஷபிரயோகங்களும் அரங்கேறியுள்ளன. இன்னும் இன்னும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டவர் மத்தியில் ஓரளவுக்காவது இவை வெளிச்சத்துக்கு வருகின்றன. ஆனால் - எம்மவரிடையே இவை குமுறல்களாகவும், கோபங்களாகவும், ஆற்றாமையாகவும் பெண்களுக்குள் அடங்கிக் கிடக்கின்றன.

இவைகளை வெளியில் சொல்லிக் கலாசாரம், பண்பாடு, என்று வாயளவில் உச்சரித்து மனதுள் போலியாக வாழும் மனிதமல்லாதவர்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிய எம் பெண்களிடம் தைரியம் இல்லை. வெளியல் தெரிந்தால் - சமூகமும் அதன் கலாசாரமும் அதன் பண்பாடும் - பாதிக்கப்பட்ட பெண்ணையே பாழுங்கிணற்றில் தள்ளி விடும் என்ற பயம்.

இந்த நிலையில் நன்கு யோசித்துப் பாருங்கள். ஒரு பெண் தன்னைக் காத்துக்கொள்ள - எமது கலாசாரமும், பண்பாடும் உதவுகிறதா? அல்லது விழிப்புணர்வும், தைரியமும் உதவுகிறதா? என்று.

தமிழர்களாகிய எமது கலாசாரத்தையும், பண்பாட்டையும் காத்து, எமது முகங்களை அழியவிடாது காப்பது ஆண் - பெண் இருபாலாரதும் கடமை. அதற்காகப் போலிகளை - கலாசாரம் பண்பாடு என்று பொய்யாகப் பெயர்சூட்டி பெண்களில் திணித்து அவர்களை அடக்க நினைப்பது மடமை.

'இந்தப் பொய்களின் வேசம் புரியாது போலிக் கலாசாரங்களில் தம்மைப் புதைத் துக் கொள்வது எம் பெண்களின் அறியாமை.

முதலில் எமது பெண்பிள்ளைகளிடம் எந்தப் பிரச்சினையையும் பெற்றோருடன் பேசி தம்மை நெருங்கும் துட்டர்களிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் தைரியம் வர வேண்டும்.

பெற்றோர்களுடன் அவர்கள் இப்படியான விடயங்களை இயல்பாகப் பேசும் துணிவு ஏற்படும் படியாகப் பெற்றோர் நடந்து கொள்ள வேண்டும்.

எமது முன்னோர்கள் வரையறுத்த அநேகமான கோட்பாடுகள் அர்த்தமுள்ள அவசியமான விடயங்களுக்காகவே இருந்தன.

அவைகள் ஒவ்வொன்றுக்குமான கரு ஆரோக்கியமானதாகவும் அழகியதாகவும் இருந்தன.

ஆனால், நீண்ட கால ஓட்டத்தில் காரணங்கள் திரிபுபட்டது மட்டுமல்லாது காரியங்களும் ஆணாதிக்க மேலோங்கலில் மிகுந்த தொரு சுயநல நோக்குடன் கட்டாயமாகத் திரிக்கப்பட்டு இன்றைய காலகட்டத்தில் ஏன் எதற்கு என்ற சிந்தனைகளெதுவுமின்றி உண்மையான தேவையான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டு கலாசாரம், பண்பாடு என்ற போர்வைக்குள் பொய்யான விடயங்கள் தொடர்கின்றன.

வருத்தமான விடயம் என்னவெனில், அநேகமான பெண்களுக்கு இந்தப் பொய்யான திணிப்புகளின் போலிவடிவம் புரிவதில்லை.

தாம் போலிக் கலாசாரத்தில் பொசுங்கிக் கொண்டிருப்பது பற்றி அவர்கள் எந்தவித சிந்தனையும் கொள்வதில்லை.

உண்மையில் சாமத்தியச் சடங்கை கோலாகலமாக ஹோல் எடுத்து விழாவாகச் செய்யும் அநேகமான பெற்றோருக்குச் சாமத்தியச் சடங்கு செய்வதற்கான காரணம் என்னவென்றே தெரியாது.

✷ வீடியோ கமராவில் எடுப்பதற்கும்

✷ என் வீட்டுச் சாமத்திய வீடு மற்றையவர் வீட்டை விடப் பெரிதாக நடந்ததெனக் காட்டுவதற்கும்

✷ இப்படிப் பெரிதாகச் செய்யாவிட்டால் என்ன நினைப்பார்கள் என்பதான போலி கௌரவத்துக்கும்

✷ கொடுத்த அன்பளிப்பை திரும்பப் பெற்றுக் கடன் கழிப்பதற்கும்...........

என்றதான இன்னும் பல காரணங்களைக் காரணமாகக் கொண்டுதான் பூப்படைந்த பெண்ணைக் காட்சிப் பொருளாக வைத்து இன்று பெரும்பாலான சாமத்தியச்சடங்குகள் நடைபெறுகின்றன.

இதற்கு வெறுமே கலாசாரம் பண்பாடு என்று போலி முலாம் பூசப் படுகிறது. அவ்வளவுதான்.

**சந்திரவதனா செல்வகுமாரன்**

## தோற்றுப்போனவை

ஏய் பெண்ணே...!
அடுப்பங்கரையில் இன்னும்
சுட்டெரிக்கும் விறகாய் நீ
ஏன் வீழ்ந்து கிடக்கிறாய்?
பூஜை அறையில்
பூஜிக்கும் புஷ்பத்தோடு
மீட்டப்பட வேண்டிய
வீணையல்லவா நீ...?

கண்ணீர்த் துளிகளில்
கனவுகளை அழிக்க
காலத்தின் நீள்
வரையறை
அடிமைத்தனத்தில்
இன்னுமா உன்மீது
சமூகத்தின் பார்வைகள்
சக்திகளின் போர்வைகள்

எப்போது இதற்கு
உன்விலங்குடைப்பும்!
விடையனுப்பும்
உன்கன்னத்தை
காயப்படுத்திய
வடுக்களுக்கு எப்போது
பரிகாரமும்,
கடிவாளமும். - **அபிநயா**

# மருத்துவ

**பெண் நோயியல் தொடர்பாக, எமது வாசகர்கள் அனுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணர் - Dr.G.பவானி மற்றும் Dr.A.ஜெனத் ஆகியோர்.**

**மாதவிலக்கு வருமுன் உடலில் ஏற்படும் மாற்றங்கள் எவை?**

மாதவிலக்கு வருமுன் உடலில் ஏற்படும் மாற்றங்கள் - ஆளுக்கு ஆள் வேறுபடலாம். இவை ஓமோன்களின் தொழிற்பாட்டால் ஏற்படுகின்றன. சிலருக்கு மார்பகங்கள் வீங்குதல் அல்லது அதில் நோ ஏற்படலாம். வேறு சிலருக்குத் தலையிடி, சத்தி போன்றன ஏற்பட இடமுண்டு. வயிற்றுநோ, கை, கால் உளைவு என்பனவும் ஏற்படலாம்.

**மனநிலையில் ஏற்படும் மாற்றங்கள் எவை?**

மாதவிலக்கின்போது, மனநிலையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் அதன் தன்மை என்பன ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. சோர்வு (depression), பதகளிப்பு (Tension), அடிக்கடி கோபம் ஏற்படல், ஆர்வமின்மை என்பன பொதுவாக ஏற்படுகின்ற மனநிலை மாற்றங்களாகும். இதனை நாம் **Premensural Tension** என்கின்றோம். இவற்றிற்குப் பொதுவாக வைத்தியம் அவசியமில்லை. . ஆனால், 5% மான பெண்களில் இம்மாற்றங்கள் அபாயகரமான நிலைமையைத் தாண்டுகின்றது. இதனை **'Premensura Tension syndrome"** என்கின்றோம். இந்தநிலையில், பரீட்சைப் பெறுபேறுகளில் பாரியவீழ்ச்சி மற்றும் சிறு குற்றச்செயல்கள், விபத்துக்கள் என்பன ஏற்பட இடமுண்டு.

# ஆலோசனை

எனவே, இந்தநிலையில், மருத்துவ உதவி அவசியமாகும்.

**மாதவிலக்கு ஒழுங்காக ஏற்பட்டபோதிலும், சில மாதங்களில் முழுமையாக ஏற்படாமல், சில துளிகள் மட்டும் ஏற்பட்டு நின்று விடுகின்றது. இது ஏதேனும் நோயின் வெளிப்பாடா?**

மாதவிலக்கின்போது ஏற்படும் குருதிப்போக்கின் அளவு - ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது. இது பொதுவாக 3-5 நாட்கள் நீடித்தபோதிலும், சிலருக்குக் குருதிப்போக்கு மிகமிகக் குறைந்தளவில், அதாவது துளிகளாக மட்டுமே ஏற்படுகின்றது. இது ஒரு சாதாரண நிகழ்வாகும். நோயின் வெளிப்பாடாகக்கொள்ளத் தேவையில்லை. இவர்கள் - குழநதை பெற்றுக்கொள்வதில் பிரச்சினை ஏற்படுவதில்லை.

**ஆரோக்கியமாக இருந்தபோதிலும், சிலருக்குப் பருவமடைந்த நாளிலிருந்தே 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒருமுறைதான் மாதவிலக்கு ஏற்படுகின்றது. இவர்கள் கர்ப்பம் தரிக்கமுடியுமா?**

இதுவும் ஒரு சாதாரண நிகழ்வாகும். இவர்களும் கர்ப்பம் தரிக்க முடியும். ஆனால், கருத்தரிப்பதில் தாமதமேற்பட இடமுண்டு. ஏனெனில், இவர்களில் சூலிடல் எந்த மாதத்தில் நடைபெறமுடியும் எனக் கூறுவது கடினம்.

**தொடர்ந்து சரியாக மாதவிலக்கு வரும்போது, ஏதாவது காரணத்திற்காக மாத்திரை பாவித்து மாதவிலக்கைத் தள்ளிப்போடுவது தீங்கிழைக்குமா?**

ஒரு சில தடவைகள் மாதவிலக்கைத் தள்ளிப்போடுவதற்கு மாத்திரை பாவிப்பதினால் தீங்கில்லை. உதாரணமாக திருமணநாள் மற்றும் பரீட்சைக் காலத்தில் மாத்திரை பாவித்து, மாதவிலக்கைத் தள்ளிப்போடுகின்றனர். ஆனால், தொடர்ச்சியாக இதனைப் பாவிப்பதாயின் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

(தொடரும்...)


**பெண்நோயியல் சம்பந்தமான பிரச்சினைகள், சந்தேகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தால், அதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.**

சிநேகிதியே
"நமது ஈழநாடு"
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# நட்ஸ் கட்லெட்

## தேவையானவை

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | - அரைக்கிலோ |
| முந்திரிகை வற்றல் | - 15 |
| தோல்நீக்கிய கச்சான் | - 100 கிராம் |
| கோதுமை மா | - 4 தேக்கரண்டி |
| சீரகம் | - 1 தேக்கரண்டி |
| பச்சை மிளகாய் | - 4 |
| இஞ்சி அரைத்தது | - 1 தேக்கரண்டி |
| எலுமிச்சைச்சாறு | - 1 தேக்கரண்டி |
| கொத்தமல்லி | - சிறிதளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| எண்ணெய் | - தேவையான அளவு |
| பாண்தூள் | - தேவையான அளவு |



**செய்முறை -**

உருக்கிழங்கை வேக வைத்து ,கட்டியில்லாமல் மசிக்கவும். கச்சானைத் துண்டுகளாகப் பொடியாக்கவும். உருளைக்கிழங்கில் - பொடியாக்கிய பருப்புகள், சீரகம், பச்சைமிளகாய், இஞ்சி அரைத்தது, எலுமிச்சம் பழச்சாறு, பொடியாக்கிய கொத்தமல்லி, உப்பு முதலியவற்றை ஒன்றாகச் சேர்த்து, நன்கு பிசைந்து கொண்ட பின், தேவையான வடிவத்தில் செய்யவும். கொஞ்சம் மாவைத் தனியாக கரைத்துக் கொண்டு, அதில் கட்லட்டுக்களைப் போட்டு பொரிதெடுக்கவும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவினையும் மாண்டது அமைச்சு*

- திருக்குறள்

# நமது நோக்கு

## இராஜதந்திரப் பொறி!

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபைத் தயாரிக்கும் பணிகள் பாரிஸில் நடைபெற்றுள்ளன. சர்வதேச சட்டநிபுணர்கள், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வன் தலைமையில் இந்தத் திட்டவரைபு தயாரிப்புப் பணியை பூர்த்தி செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தத் திட்டவரைபு எத்தகைய சூழலில் தயாரிக்கப்பட்டது என்பதனை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், பாரிஸில் நடைபெற்ற தமிழ் செயற்பாட்டாளர் சந்திப்பில் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம் மூன்றாவது தடவையாகவும், வெற்றுக்கோதான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்தபோதுதான், புலிகளின் தலைவர் பிரபாகரன் திட்டவரைபைத் தயாரிக்கும் முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசு முன்வைக்கும் தீர்வுத்திட்ட யோசனைகளை நிராகரிக்காமல், பதிலாக புலிகள் தரப்பில் இருந்து திட்டவரைபைத் தயாரித்து அரசிடம் கையளிப்பதென்ற முடிவை பிரபாகரன் எடுத்ததாக தமிழ்ச்செல்வன் தெரிவித்துள் ளார்.

இங்கேதான், புலிகள் தாம் இராஜதந்திர அணுகுமுறையுடன் செயற்படுகின்றனர் என்பதை நன்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

அரசாங்கம் முன்வைத்துக் கொண்டிருக்கும் வெற்றுக்கோதான தீர்வுத்திட்டங்களைப் புலிகள் தொடர்ந்தும் நிராகரித்துக்கொண்டிருப்பார்களேயானால், சர்வதேசரீதியில் புலிகளுக்கு எதிரான கருத்துக்களே தோன்றும்.

புலிகள் எதற்கும் விட்டுக்கொடுப்பதில்லை. அவர்கள் திட்டமிட்டே தீர்வுத்திட்டங்களை நிராகரித்து வருகின்றார்கள் என்று பரவலான கருத்து உருவாகிவிடும்.

கடந்த காலங்களிலும், பல்வேறு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு, அது தோல்வியில் முடிந்தபோது, புலிகள் மீதே பழி போடப்பட்டது. இந்த வகையில், புலிகள் மீது போடப்படவிருந்த ஒரு பழியில் இருந்து மிகவும் சாதுரியமாகப் புலிகள் வெளியேறியுள்ளனர்.

அசாங்கம் எந்தவித உருப்படியும் அற்றதான தீர்வை முன்வைக்கும்போது, அதைத் தொடர்ந்து நிராகரித்துவிடுவதைவிட மாற்றுத்தீர்வு யோசனையை - முன்வைப்பதுதான் மிகச்சிறந்த விவேகமான செயல் என்பதைப் புலிகள் செயலில் காட்டியிருக்கிறார்கள்.

புலிகள் தரப்பு தயாரித்து அரசிடம் கையளிக்கவுள்ள திட்டவரைபு - தமிழ்மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்குவதாக அமையுமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்தத் திட்டவரைபைப் புலிகள் சமர்ப்பித்தால் அரசாங்கம் ஏற்குமா? இல்லையா? என்பதுதான் இனி அடுத்துள்ள பிரச்சினையாக இருக்கும்.

இதுவரை புலிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வு எதையும் முன்வைக்காமல் - அதன்மூலம் தமது பக்கத்துக்குச் சாதகமான முறையில் அரசு விவகாரங்களைக் கையாண்டு வந்தது.

ஆனால் - புலிகள் இப்போது எடுத்துள்ள அதிரடி அரசியல் நகர்வினால், அரசாங்கமே கூடுதலான நெருக்கடி நிலையைக் சந்திக்கப் போகிறது. புலிகள் கையளிக்கப்போகும் திட்டவரைபினை அரசாங்கம் உடனடியாக பெற்றுக்கொள்ளும் என்று எவரும் இலகுவில் உடனடியாகக் கருதிவிடமுடியாது.

காரணம் என்னவெனில் - தமிழ்மக்களுக்கு எப்போதுமே நியாயமான உரிமைகளை வழங்குவதில் சிங்கள அரசுகள் ஆர்வம் காட்டுவதில்லை. புலிகள் முன்வைக்கும் தீர்வுயோசனைகள் நிச்சயமாக தமிழ்மக்களின் அபிலாஷைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யத்தக்கதாக் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இங்கேதான், அரசின் நிலைப்பாட்டுக்கும், புலிகளின் நிலைப்பாட்டுக்கும் இடையில் வேறுபாடுகள் தோன்ற வாய்ப்புக்கள் உள்ளன.

இத்தகையதொரு நிலையில்தான் - அரசாங்கம் புலிகளின் திட்டவரைபை உடனடியாக நிராகரிக்க முடியாமல், ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் திண்டாடும் நிலை ஏற்படும்.

ஏனெனில் - இதுவரை சிங்கள அரசாங்கம் எந்தப் பொறியில் வைத்துப் புலிகளை அமுக்கி, சர்வதேச சமூகத்தின் முன்பாக, அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார்களோ - இப்போது அரசாங்கம் அதே பொறியில் சிக்கிக்கொள்ள நேரிடும்.

இதனால்தான் - உடனடி முடிவு எடுக்கமுடியாத நிலை அரசுக்கு ஏற்படும். இந்த நிலையால் - அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் ஆதரவைக்கூட இழக்கலாம்.

இங்கேதான், புலிகளின் இராஜதந்திர நகர்வுகளின் மூலம் தமிழ்மக்கள் உறுதியான ஓர் சுமுகமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது கண்கூடு.

---

### இடைக்கால நிர்வாக சபையில்

# நிதி, பாதுகாப்பு அதிகாரங்களையும் விடுதலைப் புலிகள் கேட்கவுள்ளனராம்!

### 'லக்பிம' பத்திரிகை கூறுகிறது

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக அமைப்பில்- நிதியையும், பாதுகாப்பையும் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற கருத்தை, புலிகள் முன்வைத்துள்ளதாக, 'லக்பிம' பத்திரிகை - செய்தி வெளியிட்டுள்ளது.

பாரிஸில் நடைபெறும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் பற்றி ஆராயும் விடுதலைப் புலிகளின் மாநாட்டில், இக்கருத்து முன்வைக்கப்பட்டுள்ளதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்தத் தீர்மானத்தால், அரசாங்கம் ஒரு சிக்கலான நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படலாம் என, அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

நிதியை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தால், வடக்கு-கிழக்கு பகுதியில் வாழும் முஸ்லிம்களின் நிலையை அது பாதிக்கும் என்ற கருத்தினை, முஸ்லிம் கட்சிகள் கொண்டிருக்கிறன.

நிதியும், பாதுகாப்பும் - விடுதலைப் புலிகளிடத்தே ஒப்படைக்கப்படுவது, முஸ்லிம் கட்சிகளுக்கு விருப்பில்லாத நிலையைத் தோற்றுவிக்கும் சூழ்நிலை உருவாகும்.

இதன் அடிப்படையில் அரசு - பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படலாம் என்று அப்பத்திரிகை மேலும் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

# பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்க சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை!

பாதுகாப்பு அமைச்சை - திலக் மாரப்பனவிடம் இருந்து மீளப்பெறுவது குறித்து, தான் ஆலோசித்து விருவதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

தேசிய சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த பிக்குகள் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து, நாட்டின் பாதுகாப்புநிலை மோசமடைந்து வருவதாகவும், இதனால் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, விடுதலைப்புலிகள்- பெருமளவு ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்துள்ளனர். வன்னியில் ஆயுதப்பயிற்சிகள் இடம்பெறுகின்றன. கிழக்கு மாகாணத்தில். முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை.

எனவே, ஜனாதிபதி இது குறித்து கவனம் செலுத்த வேண்டும். பாதுகாப்பு அமைச்சை - ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருதல் மூலமே, நாட்டைப் பாதுகாக்கமுடியும் எனவும், தேசிய சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த பிக்குகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளில் கவனம் செலுத்துமாறு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் கேட்டுள்ளேன். பாதுகாப்பு அமைச்சை - எனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவது குறித்தும் விவாதித்து வருகின்றேன் என்றும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

# ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களில் நிறுத்தப்படாத வாகனங்களுக்கு தண்டப்பணம் அறவிடப்படும்!

### நல்லூர் பிரதேசசபை செயலாளர் அறிவிப்பு

திருநெல்வேலி சந்தை மற்றும் அதனை அண்டியபகுதிகளில், குறிப்பிட்ட தரிப்பிடங்களில் நிறுத்தப்படாத வாகனங்களுக்குத் தண்டப்பணம் அறிவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள திருநெல்வேலிச்சந்தை மற்றும் அதனை அண்டியபகுதிகளில், பொருட்களை வாங்க வரும் மக்கள், தமது வாகனங்களைக் குறிப்பாக, மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளைக் குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் நிறுத்திச் செல்கின்றனர்.

அதனைத் தடுப்பதற்காக, நல்லூர் பிரதேச சபையினரால்- சில இடங்களில் 'வாகனங்கள் இங்கே நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.' 'துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தக் கூடாது' எனும் வாசகங்கள் அடங்கிய பெயர்ப்பலகைகள் நடப்பட்டிருக்கின்றன.

ஆனால், அவற்றை எவரும் கருத்திற்கொள்ளாது, துவிச்சக்கர வண்டிகளை அந்தப் பெயர்ப்பலகைகளின் கீழேயே நிறுத்திவிட்டுச் செல்கின்றனர்.

இதனால், வீதிப் போக்குவரத்தில் சிக்கல்கள் ஏற்படுவதுடன், சந்தையைச் சுற்றியுள்ள வர்த்தக நிலையங்களும் - பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றன. அத்துடன், திருட்டுக்களும் அதிகமாக இடம்பெறுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக - நல்லூர் பிரதேசசபையினரால் குறிப்பிடப்பட்ட இடங்கள் அல்லது பாதுகாப்பு நிலையங்கள் தவிர்ந்த, ஏனைய இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களைத் தமது அலுவலகத்துக்குக் கொண்டுசென்று, தண்டப்பணம் அறவிடுகின்றன்ர்.

அதனால், சந்தை மற்றும் அதனை அண்மித்த வர்த்தக நிலையங்களுக்கு வரும் மக்கள் - தமது வாகனங்களை ஒழுங்காக உரிய இடத்தில் நிறுத்துமாறும், அவ்வாறு நிறுத்தப்படாதபட்சத்தில் - தண்டப்பணம் அறவிடப்படுமெனவும் நல்லூர் பிரதேசசபை செயலாளர் செ. செல்வரத்தினம் தெரிவித்தார்.

# ஹற்றன் நஷனல் வங்கியின் உதவியுடன் குடாநாட்டில் தூறல் நீர்ப்பாசனத் திட்டம்!

குடாநாட்டு விவசாயிகளின் பயிர், நீர்ப்பாசன முறைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் உற்பத்திகளை ஊக்குவிக்கவும், பயிர் நோய்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் விவசாயத்திணைக்களத்துடன் இணைந்து "கிறிரெக்" **(GRRI TECK)** நிறுவனம் - தூறல் நீர்ப்பாசனத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 17 விவசாயிகளுக்கு - அவர்களின் பயிர்ச்செய்கை நிலத்தில் இரண்டு பரப்பு இதற்கென ஒதுக்கப்பட்டு, பரீட்சார்த்தமாக இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு, ஒவ்வொருவருக்கும் - தலா 22 ஆயிரம் ரூபாவை, கடனாக வழங்க ஹற்றன் நஷனல் வங்கி முன்வந்துள்ளது.

# கிழக்கில் ஆறு முஸ்லிம் அமைப்புக்கள் ஆயுதங்களை சேகரித்து வருகின்றன!

### பொலிஸ் அதிகாரி தகவல்

கிழக்கு மாகாணத்தில் இயங்கும் ஆறு முஸ்லிம் அமைப்புக்கள் - ஆயுதங்கள் சேகரித்து வருவதாக, குற்றப் புலனாய்வுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இருநது தெரியவருவதாக, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில், இது பற்றி பிரஸ் தாபிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் சேகரிக்கப்பட்ட இந்த ஆறு முஸ்லிம் இயக்க அமைப்புக்களின் புகைப்படங்கள் - அரசாங்கத்திற்கு, குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# இந்தியாவிலிருந்து மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கை!

இந்தியாவிலிருந்து கடல்வழியாக - இலங்கைக்குச் சட்ட விரோதமானமுறையில் கொண்டு வரப்படும் மோட்டார் சைக்கிள்களை, தடுத்து நிறுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மையில் இந்தியாவில் இருந்து தலைமன்னாருக்கு - இரண்டரை இலட்சம் பெறுமதியான பல மோட்டார் சைக்கிள்கள், இலங்கைக்குச் சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு கொண்டு வரப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் - வீதிச்சோதனையில் ஈடுபட்டுவரும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட வாய்ப்புக் காணப்படுவதால், அவர்கள் தமது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

பதிவு இலக்கம் இல்லாத மோட்டார் சைக்கிள்கள், இந்த வகையில் வீதிச்சோதனைப் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியும் எனவும், இதனால் - சட்ட விரோதமான மோட்டார் சைக்கிள்களை கண்டறிதல் சுலபமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலட்சியத்தை நோக்கி நடைபோடும் புலிகளும் எதையுமே உணராத டக்ளஸும், கதிர்காமரும்!

இடைக்கால நிர்வாகசபை வழங்கினால், நாடு பிரிந்துவிடும் என்று கூச்சல் போடுகிறாரகள். இவர்களே, வடக்



கிலிருந்து கிழக்கை பிரித்துவிட வேண்டும் என்று குரல் கொடுக்கிறார்கள்.

கிழக்கில் - திருகோணமலைக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து. அப்படியே இந்தியாவுக்கும் அபாயம் என்று, சந்திரிகா அம்மையாரின் அரசியல் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் - டில்லிக்குக் காவடி எடுத்து ஓலமிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டு, தடுத்தாட்கொள்ளவேண்டும் என்று, கதிர்காமர் எழுப்பிய ஒலி, இந்தியாவின் செவிகளில் விழவில்லை.

கதிர்காமரை முந்திக்கொண்டு டில்லிக்குச் சென்ற டக்ளஸ் - புலிகள் பற்றி ஊதிய அபாயச்சங்கும், டில்லியில் எடுபடவில்லை.

இந்தியாவை நம்புவதைவிட, உள்நாட்டிலேயே முயற்சிசெய்து பார்க்கலாம் என்று, கிழக்கில் துப்பாக்கியை வெடிக்க வைத்தும், ஆட்களைக் கடத்தியும் பார்த்தார்கள்.

கிழக்கில் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பில்லை என்று, முஸ்லிம்களை முந்திக்கொண்டு அவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்தார்கள். முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு என்ற பெயரில், தங்கள் நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள, ஆயுதப்படைகளைக் கிழக்கே அனுப்பப் கோரினார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் பின்தள்ளப்பட்டுவிடுமோ, தனது தலைமைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் ரவூப் ஹக்கீமுக்கு ஏற்பட்டது.

முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட பொலிஸ்படை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கான அவசர உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன. ஆட்திரட்டலும் நடைபெற்றது.

கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பில் -முஸ்லிம் காங்கிரஸ் அக்கறை கொள்ளவில்லை என்று, மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச - முஸ்லிம்களுக்காகக் கண்ணீர் வடித்தார்.

நாங்களா? அக்கறை கொள்ளவில்லை. சிங்கள ஆட்சியாளர்கள், சிங்களத் தலைவர்களைவிட - நாங்கள், எங்கள் முஸ்லிம் சகோதர்களையே நம்புகின்றோம் என்ற ரீதியில், பாகிஸ்தானிடம் ஹக்கீம் உதவி கோரியிருந்தார். போதாக்குறைக்கு, சவூதி அரேபியாவிடமும் உதவி கோரியுள்ளார்.

டக்ளஸும், கதிர்காமரும் டில்லிக்குச் சென்று, இந்தியாவின் உதவியைக் கோரினால், கிழக்கு முஸ்லிம்களுக்காக நாங்கள் ஏன் பாகிஸ்தானின் உதவியைக் கேட்கமுடியாது என்று ஹக்கீம் வாதிடலாம்.


எப்படியும், இருதரப்பும் தங்கள் நலனுக்காகக் கிழக்கிலங்கையை மற்றுமொரு காஷ்மீராக மாற்றுவதற்குத் தயார்செய்ய முன்வந்துள்ளன.

இன்று கிழக்கு முஸ்லிம்களுக்காகக் கண்ணீர் வடிக்கும் ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி, கிழக்கு முஸ்லிம்களுக்கு - பாகிஸ்தான் உதவமுன்வந்தால், அது கிழக்குடன் நிற்குமா? அல்லது தெற்கேயும் கால்வைக்காதா? ஹக்கீம், பேரியல் ஆகியோரின் கண்டிப் பகுதியையும் எட்டிப்பார்க்காதா என்று அச்சம்கொள்ள எவ்வளவு நாளாகும்.

பாகிஸ்தானின் உதவியை நாடும் ஹக்கீமும், முஸ்லிம் இளைஞர்களும்- ஆயுதம் ஏந்துவார்கள் என்று, வீர வசனங்களுடன் அறிக்கைவிடும் பேரியல் அஷ்ரப்பும், கிழக்கு முஸ்லிம்கள் பற்றி உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கிறார்களா?

முஸ்லிம் காங்கிரஸும் சரி, அதிலிருந்து வெவ்வேறு திசைகளிலும் பிரிந்து நிற்பவர்களும் சரி, தலைமைப்பதவிக்காகப் போட்டியிடுகிறார்களே ஒழிய, முஸ்லிம்களின் நலன் குறித்து கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே, கிழக்குப் பாகிஸ்தானைப் பறிகொடுத்த பாகிஸ்தான், கிழககிலங்கையின் உள்விவகாரத்



தில் தேவையில்லாமல் தலையிட்டு, தொலலையை விலைக்கு வாங்க முன்வரும் என்று தோன்றவில்லை. இதில் பாகிஸ்தான் தலையிடுவதை இந்தியாவும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்காது. சிங்களத் தலைவர்களுக்கும், இலங்கை கிழக்குப் பகுதிகளுக்கும் மற்றுமொரு காஷ்மீரைக் ஹக்கீம் உருவாக்க முனைவது, முழு இலங்கைக்குமே நாசம் என்பதை உணரமாட்டார்களா?

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பதவியிலிருந்து, ஹக்கீமை அகற்றுவதற்குக் கிழக்கைத் தனியாகப பிரிக்கவேண்டும் என்று கோருவதுதான் வழி.

இதன்மூலம், தான் கிழக்கு முஸ்லிம்களின் தலைவராக வேண்டும் என்பது அதாவுல்லாவின் கனவு.

திடீரென்று தேர்தல் வந்தாலும், கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று, தமது கணவரின் இடத்தைப் பிடிக்கவேண்டும் என்பது பேரியல் அஷ்ரப்பின் கற்பனை.

ஹக்கீமையும், பேரியலையும், அதாவுல்லாவையும் ஒதுக்கி, தான் முன்னுக்கு வந்துவிடவேண்டும் என்பது ஹிஸ்புல்லாவின் ஆசை.

இவர்கள் தலைமைப் பதவிக்கும், அமைச்சர் பதவிக்குமாகக் கிழக்கு முஸ்லிம்களைப் பகடைக்காயாகப் பயனபடுத்துகிறார்கள். பாவம் அப்பாவி இஸ்லாமியப் பொதுமக்கள். உணர்ச்சி வசப்படுகிறார்களே ஒழிய, நிதானமாகச் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். இன்று கிழக்கு முஸ்லிம்களுக்கு ஒரு உண்மையான, நேர்மையான தலைமையே தேவை.

பூச்சாண்டிகளும், மிரட்டல்களும் எந்தவல்லரசுகளிடம் இருந்து வந்தாலும், கவலைப்படாத விடுதலைப் புலிகள் - தங்கள் இலட்சியத்தை நோக்கி நடைபோட்டுக்கொண்டிருக்கிறார்கள். டக்ளஸும், கதிர்காமரும் கூட, இதை இன்னும் உணரவில்லையே.

அவர்கள் பலமாகவும், மக்களின் பின்னணியுடன் - ஒற்றுமையாக இருக்கிறார்கள். அவர்கள், தங்கள் கொள்கையில் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கிறார்கள்.

**எஸ்.எம்.ஜி**

# இந்த வார பலன்கள்

## 29.08.2003 ~04.09.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| செவ் யுரோ | 29கா.9-24 கன்-சந்<br>31 ப. 11-47 துல-சந்<br>02 ப. 2-13 விரு-சந்<br>04 மா. 5-21 தனு-சந்<br>04 மா. 6-10 சிங்-புத | | |
| நெப் | | | சூ.புத குரு.சுக் |
| | கேது | | புத |

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்)



இந்த ராசிக்காரருக்கு இவ்வாரம் பல நன்மையான பலன்கள் நடைபெறும். குடும்பத்தில் சந்தோசமும், குதூகலமும் இருக்கும். தேகநிலை, குடும்பநிலை நன்றாக இருக்கும். புத்திரர்களால், நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். இருப்பினும், பணநிலை அதிகம் சிறப்பாக இராது. முயற்சிக்கேற்ப லாபமுண்டு. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு- சக உத்தியோகத்தர்களின் உதவிகளும், அதிகாரிகளின் ஆசியும் கிட்டும். வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு - தொழில் நன்றாக நடக்கும். கடன் வியாபாரங்களைக் குறைத்துக் கொள்ளவும். திருமணத்தை எதிர் நோக்கியிருப்பவர்களுக்குக் கருமம் கைகூடும். மாணவர்களுக்கு மன உற்சாகம் குறைவாகவே இருக்கும்.

### இடபம்

(கார்த்திகை 2, 3, 4 ஆம கால் ரோகிணி, மிருகசீடம் 1 , 2 ஆம் கால்)



இந்த ராசியினருக்கு, இவர்களுக்கு வீட்டில் கலகலப்பு இருந்துகொண்டிருக்கும். விருந்தினர்கள், நண்பர்கள், அடிககடி வந்துபோவார்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் கூடுதலாக இருக்கும். இருப்பினும் தேகசுகக் குறைவுகளும், மருத்துவரை நாடவேணடிய தேவையும் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு, பிரயாசை கூடுதலாகக் இருக்கும். மன உறுதியும், உற்சாகமும் கைகொடுக்கும். வயது வந்தவர்களுக்கு மணவாழ்க்கை தாமதமடையும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகள் நல்ல விலைபோகும். உற்சாகமாக இருக்கும். மாணவர்கள் கற்பதில் ஊக்கமுள்ளவர்களாக இருப்பர்.

### மிதுனம்

( மிருகசீரிடம் 3 , 4 ஆம் கால்கள். திருவாதிரை, புனர்பூசம் 1 , 2 , 3 ஆம கால்கள்)



இவ்விராசிக்காரருக்கு ஜென்மத்தில் சனி இருப்பதால்- மனதில் சோர்வும், பிரயாசை மிகுதியும், படபடப்புத் தன்மையும் காணப்படும். பொருள வரவு மத்திமமாகவே இருக்கும். தூரதேசத்தவர்களின் உதவிகள் கிட்டும். தேகசுகம், குடும்பசுகம் சிறப்பாக இராது. தேக நிலைககேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். உத்தியோகத்தர்களுக்கு மகிழ்ச்சியும், உதவிகளும் உண்டு. திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு வார இறுதியில் கருமம் கைகூடும். மகிழ்ச்சி நிலவும். வியாபாரத்தில் ஈடுபட்டுளளவர்கள்- புது முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் நன்று. மாணவர்கள் உற்சாகமுடையவர்களாகக் காணப்படுவர்.

### கடகம்

(புனர்பூசம் 4 ஆம் கால், பூசம், ஆயிலியம்)



இவர்களுக்கு இவ்வாரம் பொதுவாக நன்மையான பலன்கள் நடக்கும். தூரதேசப் பிரயாணம் இடம்பெறும். பொருள் வரவு, செல்வாக்கு என்பன சிறப்பாக அமையும். தேகசுகம், குடும்பசுகம் என்பன நன்றாக அமையும். இரண்டாம் வீட்டில் குரு இருப்பதால், சகல செல்வாக்கையும் பெறுவீர்கள். வெளிநாட்டு உதவிகள் கிட்டும். குடும்பத்தில் நற்கருமங்கள் நடைபெறும். திருமணத்தை எதிர்பார்ப்போரும் சந்தோசப்படுவார்கள். உத்தியோகத்தர்களுக்கு, தமது விருப்பத்திற்கேற்ப வேலைகள் அமையும். புதிய நண்பர்களும் வருவார்கள். வியாபாரிகளுக்கு விற்பனவுமூலம் பணம் சேர்ந்த படி இருக்கும். புதிய வாடிக்கையாளர்களும் தேடிவருவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம், உற்சாகம் உண்டாகும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்)

இந்த ராசிக்காரருக்கு மனநிம்மதி குறைவாகவே இருக்கும். வேலைகள் அதிகரிப்பதனால், தேகசௌக்கியம் குறைய இடமுண்டு. வருவாய் அதிகரிக்கும். குடும்பசுகமும், நண்பர்களின்



உதவியும் தொடரும். புதியவர்களின் வருகையும், புதிய பொறுப்புக்களும் வந்துசேரும். அடிக்கடி பிரயாணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். மங்கள கருமங்கள் கைகூட வாய்ப்புகளுண்டு. எதிலும் அவசரமுடிவை எடுக்காதீர்கள். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும், சமாளித்து முன்னேறுவீர்கள். வியாபாரத்துறையினர் - மந்த நிலை காண்பர். மாணவர்களுக்கு விளையாட்டுத்துறையில் ஊக்கம் கூடுதலாக இருக்கும்.

### கன்னி

(உத்தரம் 2 , 3 , 4 ஆம் கால்கள், அத்தம், சித்திரை 1 , 2 ஆம் கால்கள்)



இவர்களுக்கு வாழ்க்கைச் செலவு அதிகரித்தவண்ணம் இருக்கும். புத்தி சாதுரியத்தால் எல்லாவற்றையும் சமாளிக்க் கூடியதாக இருப்பீர்கள். தேகசுகக்குறைவு, கைகால் உளைவு முதலியன ஏற்படும். மருத்துவரை நாடவேண்டியிருக்கும். குடும்பசுகம் நன்றாக இருககும். தேவையற்ற தலையீடுகளைத் தவிர்க்கவும். வெளியிடங்களில் இருந்து உறவினரின் வருகை அதிகரிக்கும். உத்தியோக ஸ்தானத்தில் போட்டி, பொறாமை அதிகமாகும். அவதானமாக இருக்கவும். மணவாழ்க்கையை எதிர்பார்ப்போர் ஏமாற்றடைய நேரிடும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். மாணவர்கள் உற்சாகமாகக் கல்வி கற்பர்.

### துலாம்

(சித்திரை 3 , 4 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1 , 2 , 3 ஆம் கால்கள்)



இந்த ராசியினருக்குக் குரு சஞ்சாரம் நன்மையாக இருப்பதால், பொருளாதாரச் சிறப்பும், மகிழ்ச்சியும் நிலவும். குடும்பத்தில் சிறு சச்சரவுகள் தோன்றி மறையும். அடிக்கடி பிரயாணங்களைக் கொடுக்கும். உடல்ரீதியாக சிறு சுகக்குறைவுகள் காட்டக்கூடும். உணவு, உடல் சம்பந்தமாக நிதானமாக இருத்தல் நன்று. திருமணம் ஆகாதோருக்கு அந்தப்பேறு கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு ஓரளவு சிறப்பான பலன்கள் அமையும். சக தொழிலாளர்களாலும், அதிகாரிகளாலும் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். பணநிலை திருப்தியாக இருக்கும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பு உண்டாகும்.

### விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் கால், அனுசம் கேட்டை)



இந்த ராசியினருக்கு நிம்மதிக் குறைவும், மனச் சஞ்சலமும் இருக்கும். செய்தொழில்கள் நற்பலன் தராது. தேகசுகக் குறைவினால், மருத்துவரை இடையிடையே நாடவேண்டியிருக்கும். விபத்துக்கள் பற்றி அவதானமாக இருக்கவும். தேவையில்லாத விடயங்களில் தலையிடுவதால் வீண்பழி, அவமரியாதை ஏற்படலாம். கொடுக்கல், வாங்கல்கள் சிக்கல் தரும். தூரதேசப் பிரயாணங்கள் தடைப்படும். காதலில் ஈடுபட்டவர்கள் மனசசஞ்சலம் அடைவர். தோல்வியிலேயே முடியும்.

உத்தியோகத்தினருக்கு வேலைப் பளு அதிகமாகும், தொழில் விருத்தி பெறும். வியாபாரிகளுக்கு கள்ள சந்தை வியாபாரம் கூடுதல் பலன் தரும். புதுமுதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்குச் சோம்பல் தன்மை அதிகமாக இருக்கும்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால்)



இந்த ராசிக்காரருக்கு மனச்சஞ்சலங்கள் இருப்பினும், உற்சாகத்துடன் தொழில் செய்வீர்கள். முன்னேற்றமும், வருவாயும் சிறப்படையும். தொடங்கும் கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் கிட்டும. வீட்டில் சுபகருமங்கள் நடைபெறும். எதிர்பாராத திடீர் அதிஷ்டங்கள் கைகூடும். மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தர்களுக்கு மனசசந்தோஷத்துடன் பணியாற்றக்கூடியதாக இருக்கும். வியாபாரிகளுக்கு - கையிருப்புக்கள் நல்ல விலைபோகும். மாணவர்கள் உற்சாகத்துடன் முன்னேறுவர்.

### மகரம்

(உத்தராடம் 2 , 3 , 4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1 , 2 ஆம் கால்கள்)



இந்த ராசிக்காரருக்குப் பல வழிகளாலும் மனநிம்மதி குறைந்து காணப்படும். செய்தொழில்கள் நற்பலன்களைத் தராது. தேகசுகமும், அடிக்கடி பாதிப்படையும். குடும்பத்தில் சிறு சச்சரவுகள் தோன்றிமறையும். அலைச்சல், பிரயாசை கூடுதலாக இருக்கும். எந்த விடயத்திலும் நிதானமாகச் செயற்படவேண்டும். போக்குவரத்துக்களில் பொருட்களை இழக்க நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு தேவையற்ற வீண்பிரச்சினை தேடிவரும். விவாகத்தை எதிர்நோக்குவோருக்கு கருமம் தாமதமடையும். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தநிலையில் இருக்கும். மாணவர்களை - பெற்றோர் ஊக்கப்படுத்தவேண்டும்.

### கும்பம்

(அவிட்டம் 3 , 4 ஆம் கால்கள், சதயம், பூரட்டாதி 1 ஆம் கால்)



இந்த ராசியினருக்கு வார முற்பகுதி சிறு சஞ்சலத்தைக் காட்டுமாயினும், பிற்பகுதி நற்பலன்களைத்தரும். உறவினர்கள்- வெளிநாட்டிலிருந்து வந்து மகிழ்ச்சியைத் தருவார்கள். பொருளாதார நிலை நன்றாக இருக்கும். திடீர் பிரயாணங்கள் நன்மையைக் கொடுக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு அனுகூலமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்குப் பல நன்மைகள் உண்டு. வியாபாரிகளுக்குத் தொழில் சிறப்பாக நடக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாகும்.

### மீனம்




(பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி)

இந்த ராசியினருக்குச் செய்தொழில்கள் மந்த நிலையைக் காட்டும். மன உளைச்சல் காரணமாகத் தேகசுகக் குறைவு ஏற்படலாம். குடும்பத்திலும் சிறு தகராறுகள் தோன்றி மறையும். மருத்துவச் செலவுகள் ஏற்பட இடமுண்டு. கடன்தொல்லைகளாலும், பகைவர்களாலும் எதிர்ப்புக்கள் தோன்றும். மணமாகாதோருக்கு - திருமணம் கைகூடுவதில் இழுபறிநிலை காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும், பொறுமையுடன் கருமமாற்றுவர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். விற்பனை மந்தமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை.

திருக்கணித நிலையம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

# ஈராக்கில் பின்வாங்கப்போவதில்லை அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிப்பு!



அண்மைக் காலமாக ஈராக்கில், அமெரிக்கப் படைகள் மீதும் பிரிட்டிஷ் படைகள் மீதும் சதாம் ஆதரவுப் படைகளால் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களால் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளுக்கு உளரீதியாக பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பக்தாத்திலும் பலூஜா என்ற இடத்திலும் அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட இருவேறு தாக்குதல்களில் இரண்டு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

அண்மைக்காலமாக ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களை அடிப்படையாக வைத்து கருத்து வெளியிட்ட புஷ் - ஈராக்கில் எத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டாலும், ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் பின்வாங்கப் போவதில்லை என்று தெரிவித்தார்.

சதாம் ஆதரவுப் படைகளுக்கு எதிராகவும் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களுக்கு எதிராகவும் தமது தாக்குதல்கள் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈராக்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு - அல்கெய்டாவுடனும் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களுடனும் தொடர்புடைய சதாம் ஆதரவுப் படைகளே காரணம் என்றும் - அதிபர் புஷ் மேலும் தெரிவித்தார்.



காஷ்மீரில் உல்லாச விடுதியில் பற்றிய தீயை அணைக்க தீயணைக்கும் படையினர் போராடுவதைப் படத்தில் காணலாம்.



மும்பையில் தாஜ்மஹால் விடுதிக்கு முன் கார்க் குண்டுத் தாக்குதல் நடந்த இடத்தை மக்கள் பார்வையிடும் காட்சி.

# மும்பையில் வெடித்த குண்டுக்கு ஆர்.டி.எக்ஸே பாவிக்கப்பட்டதாம்!

இந்தியாவின் மும்பையில் கடந்த திங்கட்கிழமை இரு இடங்களில் நடைபெற்ற கார்குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருள், ஆர்.டி.எக்ஸ். என ஆய்வில் தெரிய வந்துள்ளதாக தடயவியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 70 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 130 இற்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர். குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடங்களுக்கு உடனடியாகச்சென்று, குண்டுகளில் பயன்படுத்தப்பட்ட வெடி பொருளைப் பற்றி கண்டறிய தடயவியல் வல்லுநர்கள் ஆய்வு நடத்தினர்.



இது தொடர்பாக தடயவியல் வல்லுநர்கள் தெரிவிக்கையில் -

குண்டுவெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட காரின் டிக்கியில் வெடிகுண்டை வைத்து வெடிக்க வைத்திருக்கலாம் என்றும் - காரில் இருந்த சி.என்.ஜி. எரிவாயு சிலிண்டர், குண்டு வெடிப்பை மேலும் கடுமையாக அதிகரிக்க உதவியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது,

குண்டுவெடிப்பில் அடையாளம் காணமுடியாதபடி சிதைந்து போன உடல்களின் தசையை எடுத்து டி.என்.ஏ. சோதனை செய்து அவர்கள் யார் என்பதை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தடயவியல் வல்லுநர்கள் மேலும் தெரிவித்தனர்.

## அண்டவெளியில்

# தெளிவாகத் தெரியும் செவ்வாய்க் கிரகம்!



செவ்வாய்க் கிரகம் பூமிக்கு அருகில் வருவதால் பூமிக்கு பாதிப்புகள் ஏற்படாது என தமிழ்நாடு அறிவியல் கழகம் கூறியுள்ளது.

அதுபற்றி அக்கழகம் மேலும் தெரிவிக்கையில் -

59 ஆயிரத்து 620 ஆண்டுகளுக்குப் பின் பூமிக்கு அருகில் செவ்வாய்க் கிரகம் வருவதால் பூமியில் மாற்றங்கள் ஏதும் நிகழ வாய்ப்பில்லை.

ஆனால், செவ்வாயில் உள்ள மலைகள் பள்ளத்தாக்குகள் போன்றவற்றை விஞ்ஞானிகள் சற்று குறைவான தூரத்தில் பார்த்து சிறப்பாக ஆராய்ச்சி செய்ய முடியும்.

சூரியனைச் செவ்வாய் நீள் வட்டப் பாதையில் சுற்றி வருவதற்கு, அதற்கு 687 ஆண்டுகள் எடுக்கும். பூமியின் நீள் வட்டப் பாதையை விட செவ்வாயின் நீள் வட்டப்பாதை சற்று நீளமானது. இவ்வாறு சுற்றும் போது சூரியனுக்குப் பூமி தொலைவிலும் செவ்வாய் அருகிலும் வரும். அப்போது செவ்வாயும், பூமியும் சூரியனுக்கு நேர்த் திசையில் இருக்கும். அதாவது மேற்கு வானத்தில் சூரியன் இருக்கும் போது செவ்வாயும் பூமியும் கீழ் வானத்தில் இருக்கும். இது போன்று 15 முதல் 17 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வாய்ப்பு இருந்தாலும் பூமிக்கு இவ்வளவு அருகில் செவ்வாய்க் கிரகம் வருவது மனித குல வரலாற்றில் இதுவே முதல்முறையாகும்.

இதுபோன்ற நிகழ்வை பூமியில் தற்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மீண்டும் காண முடியாது. ஏனெனில் இது போன்ற நிகழ்வு. மீண்டும் 2287 ஆம் ஆண்டிலும் 2729 ஆம் ஆண்டிலும்தான் நடைபெறும். பூமியிலிருந்து 38 கோடி கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செவ்வாய் கிரகம். 5.57 கோடி கிலோ மீட்டர் அருகில் வருகிறது.

2003 மே முதலாம் திகதியிலிருந்து வான் வெளியில் செவ்வாய்க் கிரகம் தெண்படுகிறது. இருப்பினும் ஒகஸ்ட் 27 ஆம் தேதி அதிகாலை 12.30 மணிக்கு அது தெளிவாகத் தெரிந்தது. வான்வெளியில் தென்கிழக்குத் திசையில் செவ்வாய் கிரகத்தை வெறும் கண்ணால் காணலாம். தொலைநோக்கி மூலம் பார்த்தால் ஒரு பந்தைப் போல் தெரியும். 2004 ஜனவரி முதலாம் திகதி வரை இது தென்படும் என்றும் அக்கழகம் தெரிவித்தது.

# நியூஸிலாந்தின் தென்பகுதியை கடும் நிலநடுக்கம் தாக்கியது!

நியூஸிலாந்தின் தென்பகுதியை நேற்றுக் காலை கடும் நிலநடுக்கம் தாக்கியது. ரிக்டர் அளவுகோலில் 7.1 என்கின்ற அளவிற்கு பதிவான இந்த நிலநடுக்கம், பொதுவாக விவசாய நிலம் கொண்ட பகுதிகளைத் தாக்கியதால் அதிக சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஃபியோடோலேண்ட் எனும் இடமே அதிகமான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்று கூறும் நியூஸிலாந்தின் மண்பொதியியல் மற்றும் அணு விஞ்ஞானக் கழகம் - இந்த நிலநடுக்கம், கரையிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் கடலில் மையம் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளது.

நேற்று மதியம் சரியாக 12 மணி 12 நிமிடத்திற்கு இந்த நிலநடுக்கம் தாக்கியதற்குப் பிறகு, அடுத்தடுத்து நூற்றுக்கணக்கான அதிர்வுகள் அப்பகுதியில் எற்பட்டன என்றும் - அப்படிப்பட்ட நில அதிர்வில் ஒன்று ரிக்டர் அளவுகோலில் 6.2 என்று பதிவாகியுள்ளது என்றும் அணு விஞ்ஞானக் கழகம் கூறியுள்ளது.

நியூஸிலாந்தில் இருந்து 2400 கி.மீ தூரத்தில் உள்ள அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கூட, இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கெலியின் கொலை தொடர்பாக ரொனி பிளேயர் விசாரணையில்!



பிரிட்டிஷ் ஆயுத நிபுணர் டேவிட் கெலியின் மரணம் தொடர்பான ஹட்டன் விசாரணைக்குழுவுக்கு முன்னால், பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் அக்குழுவின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி அளித்த பேட்டியில், தான் பி.பி.ஸி. பத்திரிகையாளரைச் சந்தித்திருந்ததை ஒப்புக்கொண்டிருந்தார்.

இந்த விவரம் எப்படி வெளியே தெரியவந்தது என்பதை, அந்த விசாரணைக்குழுவால் பிளேயரிடம் கேள்வியெழுப்பப்படவிருக்கிறது.

பி.பி.ஸி.க்கு கெலி அளித்த பேட்டியில் - தான் ஈராக்கில் இருந்த ஆயுதங்கள் தொடர்பாக வெளியிட்ட கருத்தை மிகைப்படுத்தி பிரதமர் ரொனி பிளேயரின் காரியாலய அதிகாரிகள் கூறியதைக் கேள்விப்பட்ட பின்னர்தான் டேவிட் கெலி தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் ஒருவர் இப்படியான விசாரணகளுக்கு உள்ளாக்கப்படுவது வரலாற்றில் இது இரண்டாவது தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.

# அரபாத்தின் யுத்தநிறுத்த அறிவிப்பை பலஸ்தீன இயக்கங்கள் ஏற்கவில்லை

(காஸா)



பலஸ்தீனப் பிரதமர் அபாஸ், பலஸ்தீன - இஸ்ரேல் நெருக்கடி தொடர்பாக அவசர கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார். அதில் பலஸ்தீனத்தில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரபாத்திற்கு சம்மதமில்லையென்றும் - அரபாத்தின் அறிவிப்பு ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே என்றும் அபாஸ் தெரிவித்தார்.

இதேவேளை - அரபாத்தின் இந்த அறிவிப்பு கேலிக்குரியதென்றும், பயங்கரவாதத்திற்கு எதிராக அவர் எப்போதும் செயற்படப்போவதில்லை என்றும் - பலஸ்தீனத்தில் இருக்கின்ற இயக்கங்களை முற்றாக அழிக்கும் வரை இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையில் நிரந்தர சமாதானம் ஏற்படப்போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அரபாத்தினுடைய கருத்தை ஏற்கும் பட்சத்தில், தமக்கு ஏற்படும் ஆபத்து கூடுமேதவிர, குறையப்போவதில்லை என்று ஹமாஸ் இயக்கமும் அறிவித்திருக்கிறது.

இதேவேளை, இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினையில் தான் ஒரு அங்கம் என்பதை அரபாத் மீண்டும் நிரூபித்துவிட்டார் என்று பென்ரகன் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

## உலகவலம்

### ஈராக் குழப்பங்களுக்கு அமெரிக்க நிர்வகிப்பே காரணம்!

ஈராக்கில் ஏற்பட்டுவரும் குழப்பங்களுக்கு அமெரிக்காவின் கொள்கைகளே காரணம் என்று ஐரோப்பாவுக்கான நேட்டோ படைகளின் அதிகாரி ஜெனரல் வெஸ்லி கிளார்க் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

ஈராக்கைக் கட்டியெழுப்புவதற்கு 10 பில்லியன் டொலர்கள் தேவை என்று ஈராக்கை நிர்வகிக்கும் அமெரிக்க அதிகாரி போல் பிறீமர் தெரிவித்த கருத்துக்கே வெஸ்லி கிளார்க் இப்படிக் கூறியிருக்கிறார்.

அடுத்துவரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடியவர்களில் வெஸ்லி கிளார்க்கும் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்க விமானம் விழுந்து விமானி உடல் கருகி மரணம்!

இந்தியாவின் கொல்கொத்தாவிலிருந்து நேற்றுமுன்தினமிரவு சிங்கப்பூருக்குப் புறப்பட்ட, அமெரிக்காவுக்குச் சொந்தமான சிறிய விமானம் தீப்பிடித்து கீழே விழுந்ததில் - விமானமோட்டி அவ்விடத்திலேயே பலியானார். ஒருவர் மட்டும் அமர்ந்து பயணம் செய்யக்கூடிய இந்தச் சிறிய விமானம் பெங்களூரில் இருந்து கொல்கொத்தாவுக்கு வந்தபோதே அவ்விமானத்தில் கோளாறு ஏற்பட்டது. அதைச் சரிசெய்தபின்னர் விமானம் சிங்கப்பூர் புறப்பட்டது.

புறப்பட்ட 15 நிமிடங்களில் விமானத்தில் மீண்டும் கோளாறு ஏற்பட்டபோது விமானத்தை கொல்கொத்தா விமானநிலையத்தில் தரையிறக்கமுற்பட்டபோது, ஆகாயத்தில் தீப்பிடித்த அந்த விமானம் ஸ்வேத்பூர் என்ற கிராமத்தில் வயல்வெளியில் விழுந்து நொருங்கியது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மாதகலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லெப். கேணல் ராஜன் நினைவு நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் ராஜன் மற்றும் மாதகல் பகுதி மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வு - நேற்று முன்தினம் மாதகலில் இடம்பெற்றது.

கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை வலிகாமம் அரசியற்துறைப் பொறுப்பாளர் வசந்தி, வலி.தென்மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் பவநிதன், வலி.தென்மேற்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் மணாளன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து - லெப். கேணல் ராஜனின் திருவுருவப்படத்திற்கு உறவினர்கள் மலர்மாலை அணிவித்தனர். ஏனைய மாதகல் பகுதி மாவீரர்களுக்கு - உறவினர்கள் மலர்மாலை அணிவித்தனர்.

பின்னர், வலி.தென்மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் மண்டப நிகழ்வு நடைபெற்றது. இதில் சி.புவனேந்திரராசா, வலி.மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு, மாதகல் இந்து அபிவிருத்திமன்றச் செயலாளர் சி.ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்பின், அளவெட்டி கணேசா நாடக மன்றத்தின் 'ஆவியின் கீதங்கள்' இசை நாடகமும், இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

# தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு பாராட்டுவிழா நடத்துவதற்கு ஏற்பாடு

இங்கிலாந்து நாட்டில் 2003ஆம் ஆண்டுக்கான தமிழர் விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு, நடைபெற்ற அனைத்து வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் மற்றும் இங்கிலாந்தில் வாழும் வெள்ளையர்களின் மாநில அணிகளுடனும் மோதி, தொடர் வெற்றிகளைப் பெற்று வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்ட - தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினருக்கு பாராட்டு விழா நடத்துவதற்கு எற்பாடாகியுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்தியில் வைத்து - தாயக அணிக்கு வரவேற்பு நிகழ்வு இடம்பெறவுள் ளது இந்த நிகழ்வில் பொதுமக்கள், பொது நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தாயக அணியைக் கூட்டாக வரவேற்கவுள்ளனர்.

## வவுனியாவில் நடக்கவுள்ள பொங்குதமிழ் குறித்து படையினருக்கு விளக்கமளிக்க முடிவு

(வவுனியா)

வவுனியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வின் நோக்கம் குறித்து பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரால் படையினருக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக நேற்று வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் வைத்து இது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் க.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அடுத்த கட்டமாக இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திகளுக்கு புலம்பெயர் தமிழர் உதவ வேண்டும்!

## அமைச்சர் ஜெயலத் கூறுகிறார்

யுத்த நடவடிக்கைகளால் பாதிப்படைந்துள்ள வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கு தனியே அரசை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. பிற நாடுகளில் தங்கியுள்ள தமிழர்களும் உதவிசெய்யவேண்டும்.

இவ்வாறு - புனர்வாழ்வு, அகதிகள மீள்குடியேற்ற அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன- கோவில் வீதியில் அமைந்துள்ள யு.என்.எச்.சீ.ஆர். அலுவலகத்தில் அரச அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். நேற்றைய கலந்துரையாடலில் யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்துடன் இணைந்து அரசு மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

அரச அதிகாரிகளுடனான சந்திப்பையடுத்து ஜயலத் செய்தியாளர்களிடம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரை காலமும் எனது அமைச்சு மூலமாகவும், ஏனைய சர்வதேச நிறுவனங்களின் உதவியுடனும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இனிவரும் காலங்களில் யுனிசெப் அமைப்பு, உலக உணவு ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் நிதியம், உலக வங்கி போன்றவற்றின் உதவியுடன் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன. முதற்கட்டமாக யு.என். எச்.சி.ஆர். 11 மில்லியன் ரூபா நிதியை இத்திட்டங்களுக்காக ஒதுக்கவுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் எனது அமைச்சின்மூலம் அரச அதிபர் ஊடாக இந்தவருடத்திற்குள்ளேயே செய்துமுடிக்கப்படும். பெரும்பாலான நிதி வீடமைப்பு, தேவைகளுக்காகவே பயன்படும். ஏனையவை குடிநீர், சுகாதாரம், கல்வி, மீன்பிடி போன்ற துறைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

இந்தத் திட்டம் தொடர்பாக நான் இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பிரத்தியேகமாக சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தேன். அவர்கள் தம்மால் இயன்ற பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என உறுதியளித்துள்ளார்கள்.

அவர்கள் தமது உதவிகளை அரசு மூலமாகத்தான் செய்யவேண்டும் என்பதில்லை. தாங்கள் விரும்பிய வழியிலே உதவிசெய்யமுடியும்.

நலன்புரி நிலையங்கள் சில தனியார் காணிகளில் அமைந்துள்ளன. இது தொடர்பாக நாம் அக்கறை எடுக்கவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு அமைச்சர் நல்லூர் ஆலயத்தில் வழிபாடு செய்து திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்பு...

துறை அதிகாரிகளையும் சந்தித்துள்ளார். இதனை அடுத்து பிற்பகல் 3.30 மணியளவில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் ரெலவ்சன் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டக்களப்பு தளபதி பிரபா ஆகியோரைச் சந்தித்து - சமகால விடயங்கள் பற்றி பேசினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மூன்றாவது....

புலிகளுக்கும் தெரியாமல் இயங்க முடியும. எங்களுக்கு ஒரு செயலை இவர்கள் தான் செய்தார்கள் என்று காட்டும்- பலமான, திடமான ஆதாரங்கள் இல்லாமல் இருக்கும் பட்சத்தில், இந்தச் செயலை விடுதலைப் புலிகள் தான் செய்தார்கள் என்று எவ்வாறு குறிப்பிடமுடியும் எனக் கேள்வி எழுப்பினார்.

## வடக்கு -கிழக்கைப் பிரிக்கும்...

கிழக்கில் நடைபெற்று வருகின்றன. வன்முறைச் சம்பவங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மிகக்குறைவாகவே உள்ளன. கிழக்கில் நடைபெறும் கொலை அச்சுறுத்தல் சம்பவங்கள் மற்றும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம்களை கொலை செய்வதாக விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. இது விடுதலைப் புலிகளுடனான சமாதானச் பேச்சுவார்த்தைக்கு ஊறுவிளைவிப்பதாகவே. இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கு உரிய சாட்சியங்கள் எதுவும் வெளிவரவில்லை. கொலைகள் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அதிகரித்துள்ளன.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு சமூக பொருளாதாரம் , கலாச்சார நலன்கள் உறுதி செய்யப்பட்டு - நீதியானதும் சமத்துவமான அடிப்படையிலானதுமான தீர்வு காணப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு தமிழ்மக்கள் எந்தவிதத்திலும் அவர்களது உரிமைகளுக்கு இடையூறாக இருக்கமாட்டார்கள்.

அரச படைகள் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகினறனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி பாடசாலைகள் பொதுக்கட்டடங்களில் படையினர் தற்போது வெளியேறவேண்டும்.

ஆனாலும், தற்போது அவர்கள் தங்கியுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்காமல், படையினர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புதிய படைமுகாம்களை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் என்பன குறித்து ஜனாதிபதியின் ஆலோசகர், ஊடகப் பேச்சாளர் ஆகியோருக்குத் தெரியாதா?

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்த நடவடிக்கையின்போது ஏற்பட்ட பேரழிவுகள், மக்கள் எதிர்நோக்கும் அழிவுகள் இப்பகுதிகளுக்கு வரும் உயர் பீடத்திலுள்ள பொறுப்பு வாய்ந்தவர்கள் நேரில் சென்று பார்வையிடாதமை துரதிஷ்டவசமே.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு - புதிய உரிமையுடன் தீர்வுகாணக்கூடிய செயற்திறன் மிக்க சிங்களத் தலைவர்கள் இல்லாத காரணத்தினால் தான், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப் படவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே.வி.பியின்...

கேற்றனர்.

இந்தப் பாதயாத்திரையில், பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அனுரா பண்டாரநாயக்க, அஜந்த சொய்சா, மங்கள சமரவீர, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாத்திரையின் முடிவில் இடம்பெற்ற கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்க ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் சார்பில் தான் பங்கேற்றதாகவும், அவர் பாதயாத்திரைக்கு வாழ்த்துத் தெரிவித்திருப்பதாகவும் அனுரா பண்டாரநாயக்க குறிப்பிட்டார்.

# 5 ஆம் ஆண்டு மாணவருக்கு புலமைப் பரிசில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு - அவர்களின் நன்மைகருதி இலவசக் கருத்தரங்கு ஒன்றை யாழ். கல்வி வலயம் ஏற்பாடு செய்துள்ளது.

தொடர்ச்சியாக இன்று முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள இக்கருத்தரங்கினை மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகன் நடத்தவுள்ளார்.

இக் கருத்தரங்கில் பங்குகொள்ளவிருக்கும் பாடசாலைகள், கருத்தரங்கு நடைபெறும் பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு, தங்கள் பாடசாலை மாணவர்களையும் பங்குபற்றி பயனடைய வழிசெய்யுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

பின்வரும் பாடசாலைகளில் குறித்த நேரங்களில் கருத்தரங்கு இடம்பெறும் என அறிவிக்கப்படுகின்றது.

இன்று காலை 9 மணிமுதல் 4 மணிவரை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் வித்தியாலயத்திலும், நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், நாளை மறுநாள் காலை 9 மணிக்கு புனித பொஸ்கோ பாடசாலையிலும் இக் கருத்தரங்குகள் நடைபெறும்.

3 மணி நேரத்தில்
றப்பர் முத்திரை
செய்துகொள்ள
நாடவேண்டிய இடம்
யது றப்பர் முத்திரை
424/3, கே.கே.எஸ். வீதி
(சிவன் கோயில் அருகாமை)
யாழ்ப்பாணம். (464)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.60 | 97.30 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.79 | 153.37 |
| 1 யூரோ | 104.91 | 116.65 |
| 1 சுவிஸ் பிராங் | 67.92 | 68.74 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 60.29 | 61.25 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 23.75 | 23.75 |



இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும். (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(சி-1299)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.